# ஆதி மார்க்க னீதி மொழி

June 2023

இதழ் 23 – ஜூன் மாதம் 2023 வெளியீடு
© AMNA Trust, Chennai



**மூலமந்நிரம்**

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்ஙோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்நிர னிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

**பாத பூஜை**

சுயம் பிரகாச னித்தியானந்ந பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்ந தேசிகேந்நிரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்ஙளுக்கே னமஸ்காரம்.

**மகாசங்ஙல்ப மந்நிரம்**

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் ஙோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்நிருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்ஙாலங்ஙளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்நு மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்ஙள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்ஙள் சேர்ந்நு ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்நு தேவப்பிறப்பிலே பிறந்நு ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!



Copyright © AMNA Trust, Chennai

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே, எதார்த்த நன்மன சற்சன மக்களே, இந்த அருமையான நாளில் ஆதி மார்க்க னீதி மொழியின் 23வது மின்னணு சஞ்சிகை, நன்மக்களின் பெருமுயற்சியுடன் 16 அவைகள் மற்றும் இரண்டு இசை வகுப்புகளின் நிகழ்வுகளுடன், உங்கள் கைகளில் மலர்ந்து உள்ளது. இதில் உள்ள அத்தனை விஷயங்களும் ஒரே ஒரு பொருளான அழியா வஸ்துவாகிய நித்தியப் பொருளை எத்தனை விதமாகக் கூறினாலும் **அது** அவை யாவற்றையும் கடந்து நிற்பதாகவே உள்ளது. **அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகுத்தி குறுகத்தரித்த குறள்** என்ற ஔவை பிராட்டியின் வாக்கின்படி ஆண்டவர்கள் அருளிய அரும் பெரும் நிலைகள் யாவும் உள்ளடங்கிய முதன் னூலாகிய ஆதி மெய் உதய பூரண வேதாந்தமும், வேதங்களாகிய கோடாயிதக்கூர், வான்மதிக்கொரல் இவற்றின் மெய்ஞான ரகசியங்கள் இன்னதுதான் எனக் கூறும் வழினூலாகவே, அழகணிசித்தர் அழகு நிலைப் பாடல்களும், மெய்ஞான ரகசியங்கள் உள்ளடங்கிய திருவள்ளுவர் பெருமான் அருளிய திருக்கொரலும், பகவான் வாசுதேவ கிருஷ்ணர் அருளிய பகவத்கீதையின் யோக ஞான ரகசியங்களும், யோவானின் சுவிசேஷங்களும், கைலாய கம்பளி சட்டை நாயனாரின் ஞான நிலைகளும் உள்ளன. இவற்றை வேத சாட்சிகளுடன், தியாகராஜன், வெங்கடேச முத்து, கோபிநாத், விஜயகுமார், ஜீவிதா ஆகியோர் ரத்தின சுருக்கமாக மக்களுக்கு விளங்கும் படியாக சிறப்பாக எடுத்து இயம்பியுள்ளனர். இவற்றை உள்ளடக்கிய இச்சஞ்சிகை, வரும் வரும் காலங்களில் பிரம்மாண்ட ரகசியங்களை உள்ளடக்கி பேசக்கூடிய ஒன்றாக இருக்கும் என்பதை எண்ணி எங்கள் நெஞ்சம் பெருமிதம் கொள்கிறது. இப்படியான வரமாதி வரங்களும், தர்மங்களும், புண்ணியங்களும் செய்யக்கூடிய வரமானது, பரிசுத்த ஆவி தெய்வம் பரம்பொருள் பிரம்ம பிரகாச மெய்வழிச் சாலை ஆண்டவர்களின் அருளாசியால் நிகழ்ந்து கொண்டிருப்பது கண்னேர் சாட்சியாக உள்ளது. ஆதிமார்க்க னீதி அவையின் அங்கங்களுக்கும், அவர்களுக்கு இப்போத **னா** வசனங்களை எடுத்து கூறும் நன் மக்களுக்கும், இதற்கான காரண கருவியாக என்னையும் வழி நடத்திக் கொண்டிருக்கும் பரம்பொருளின் திருவடியை போற்றி வணங்குகிறேன். திருமெய்ஞான வசனங்களை அடிநாதமாக தாங்கி வரும் இச்சஞ்சிகையின் விஷயங்கள் யாவற்றையும் உள்வாங்கி செயல் உடையதாக ஆக்கிக்கொள்ளவே இதனை உன்னத லட்சியமாக கடமையாக உங்கள் முன் கூறிக் கொண்டிருக்கிறோம். நன்மக்கள் யாவரும் பார்த்து படித்து பயனடைய வேண்டும் என வாழ்த்துகிறேன். நமஸ்காரம்.

**சாலை ரவி**

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai 

***கிழக்கு வெளுக்கும் முதற்குறியிலிருந்து சூரிய உதயத்திற்கு இடையில் சுவர்ண லோகத்துக் காற்று இந்த உலகத்தின்மேல் இறங்குகிறது. அது சுமார் மூன்று னிமிஷ னேரம் இறங்கும். அது இன்ன னேரத்தில்தான் இறங்கும் என்பது இல்லை. அந்தக் குறிப்பிட்ட காலத்தின் முதல் னேரத்திலாவது மத்திய னேரத்திலாவது பிந்திய னேரத்திலாவது இறங்கும். அப்படி அக்காற்று இறங்கும் அன்னேரத்தில் விழித்துக்கொண்டு இருந்து, படித்துக்கொண்டாவது, படிப்பதைக் கேட்டுக்கொண்டாவது, அல்லது ஏதாவது வேலை செய்துகொண்டாவது இருந்நால்தான் அந்தக் காற்று உன்மேல் படியும். இப்படியாக இந்தக் காற்று உன் உயிரில் படியப் படிய, சேரச் சேர, உன் அறிவு துலங்குகிறது. உன்னிடத்தில் ஞானவேட்கை அதிகமாகிறது. ஆகையால்தான், காலை 4-30 மணிக்கு எழுந்திருந்து, கை கால் சுத்தி செய்துகொண்டு, படித்துப் பாடிக்கொண்டிருக்க வேண்டும் என்று னாம் எடுத்து வைத்தது.***

***~ சாலை ஆண்டவர்கள்***



Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2023 மே மாத அவை நிகழ்வுகள் – 2023 ஜூன் மாத வெளியீடு

**01-05-2023 ~ தூத்துக்குடி சிறப்பு சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. விஜயசித்ரா**

**குருபிரான் அருளமுதம்:**

**புலன்வழிப் பற்றியோடி போக்கியென் வயதை யெல்லாம்...** என்ற தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**ஆனஅஞ் செழுத்துளே அண்டமும் அகண்டமும்**
**ஆன அஞ்செழுத்துளே ஆதியான மூவரும்**
**ஆன அஞ்செழுத்துளே அகாரமும் மகாரமும்**
**ஆன அஞ்செழுத்துளே அடங்கலாவ லுற்றதே.** **(சிவவாக்கியர்)**




அடங்காத மனம் ஆன அஞ்செழுத்துள்ளே, தானாக அடங்கி ஒடுங்குவதை ஆண்டவர்கள் **புலன் வழி பற்றியழித்திடாது** என அருள்கிறார்கள். நமது நூறு வருட ஆயுளே, ஒரு பூவின் ஒருபொழுது ஆயுள். நம் ஆவி வீணாவதை மீட்கவே கலிமாவின் இரகசியம் தன்னிலறிய வேண்டும் என்கிறார்கள். யாவர்க்கும் சமத்துவமான அறுசுவை அனுபவிக்கும் கர்த்தாவைத் தன்னில் கண்டால் தான் சமத்துவம் வரும். இல்லறம் என்பது அகமியத்தில் நாம் இருந்து வாழும் இடமாக அறம் செய்யும் வீடாக உள்ளது. அழியும் இப் பொய் தேகத்தில் அழியாத மெய் ஆன்மாவை அறிவதற்காக அழிவற்ற எழுதாத எழுத்தாக உண்டாக்கப் பெற்றதே கோவில்கள்.

அவரவருள் விளங்கும் முழு முதற் கடவுளின் கீழ் தொழிலாளியாக ஓய்வின்றி வேலை செய்யும் 96 தத்துவங்களும் தன் எஜமானை அறியவில்லை. யோக சாதனத்தின் மூலம் எஜமானறிந்து பாடுபட்டுக் கூலி வாங்கத் தெரிந்த ஆண் பிள்ளைகளாக நம்மையும் ஆக்கி வைத்துள்ள பரிசுத்த ஆவி தெய்வத்தை எப்போதும் போற்றி வணங்கக் கூடிய தொழிலாளியாக கொத்தடிமைகளாக நாம் இருக்க வேண்டும். நாம் கேட்காமலே அருட்கொடை வழங்கிக் கொண்டே இருக்கும் எஜமானை அறியாதவனே, வேதம் பழிக்கும் இழி நிலைக்கு ஆளாகிறான். தனது இணங்கிய சுபாவத்தால் குழந்தைசாமி ஐயா, ஆண்டவர்களிடம் பெற்ற ஞானத்தமிழ் இன்று நம் தலையையும் செழிக்க வைத்துக் கொண்டிருக்கும் வசந்த காலமாக உள்ளது.

*ஜீவசகோதரர் வடிவேலன்:* கடலில் தத்தளிக்கும் ஒருவனுக்கு கரை காட்டும் கலங்கரை விளக்கு போல், பிறவிக் கடலில் தத்தளிக்கும் நம்மை துறைமுகப்பிற்கு தன் னாத ஒளியால் கரை சேர்ப்பவரே குருபெருமான். அன்பு உருவான அவரிடமே அவரவரும் தன் நாமத்தை தரிசிக்கும் அசலான கல்வியைக் கற்க முடியும். **அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே அன்பெனும் கரத்தமர் அமுதே** என அன்பே உருவாக பரசிவத்துக்குள் அடங்கி ஓயாத் தொழிலை அழியாது நடத்திக் கொண்டிருக்கும் உயிரொளி அறிவை அறிய குருபெருமானின் அமுத மொழிகளே துணை என்கிறார் வள்ளல் பெருமான். குருபிரான், அன்பின் மூலமாக நம்மை நெறிப்படுத்தி, அறம் செய்யப் பழக்கி, ஆறாவது அறிவை அறிய வைத்து, பிறவாமையில் நம்மை ஆக்குகிறார்கள். இதையே,



Copyright © AMNA Trust, Chennai 

**கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்**
**மற்றீண்டு வாரா நெறி (திருக்கொரல்)**

என திருவள்ளுவ பிரானும் அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரர் குமார்:* நான் யார்? என அறிவதே தன்னையறிதல். நான் என்ற அகங்காரம் அழியும் போதே ஒருவன் ஜீவன் முக்தனாக முடியும். பெரியோர்கள் கூறும் நான் என்பதை நாம், அவர்கள் தன்னை கூறுகிறார்கள் என எண்ணுவதே அறியாமை. மெய்ஞானிகள் தன்னை நாடி வருபவர்கள் தன்னைவிட மேலான நிலை பெற வேண்டும் என எண்ணுவது போல் ஒரு பணக்காரன் எண்ணுவதில்லை. தொழிலையே மூலதனமாகக் கொண்ட 96 தத்துவங்களாகிய தொழிலாளிகளின் உழைப்பின் உன்னதத்தை நமது அகமியத்தில் அறிய, குருபிரானின் அருளே துணை.

*ஜீவசகோதரர் பழனிவேல்:* இரவு பகல் ஓயாது ஒழியாது அயராது ஊண் உறக்கமற்று நம்மை சுமந்து கொண்டு அலையும் பாட்டாளியாகவும், பரந்தாமனாகவும், அன்பெனும் அறிவாகத் திகழும் இறைவனைக் கை காட்டும் கர்த்தராகிய நம் ஆதி மார்க்க னீதி அவையின் தலைவர் சாலை ரவி அப்பா, தூத்துக்குடிக்கு விஜயம் செய்து அவையை சிறப்பித்தமைக்கு எனது பணிவான நன்றியும் நமஸ்காரமும். மேலும் அவையில் கலந்து கொண்டு சிறப்பித்த அனைத்து மக்களுக்கும் எனது நன்றியும் நமஸ்காரமும். மேற்படி பகிர்வுகளை தொடர்ந்து தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

**04-05-2023 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. குமரேசன்**

**தேகம்னம் போலுள்ள எம்குரு ... தேவர் ஈசனே** என்ற ஐம்மணிப் பொதிகை பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:** ஆறாவது அறிவுடன் சுழிமுனை பூட்டு திறந்து காட்டும் பிரம்ம வித்தையை அருளும் மெய் ஞானிகளை சாதாரண மனிதர்களாக எண்ணுவதே ஞானம் பெற தடையாக உள்ளது.

**வான்மதிக் கொரல் வாக்கியம் எண்-111 :** திருவள்ளுவனாயனார் கூறிய திருக்கொரலுக்கு உலகத்தவர் பார்க்கும் பொம்மை அர்த்தமும், ஞானம் பெற்றவர்கள் அதனை பார்க்கும் விதத்திற்கும் உள்ள வேறுபாடு, மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் போன்றும் நிலத்தை உழுது பண்படுத்தி பலன் பெறுபவனுக்கும் அதனை வேடிக்கை பார்ப்பவனுக்கும் உள்ள வித்தியாசம் போன்றும் உள்ளது.

*ஜீவசகோதரி லாவண்யா:* **முச்சுட ரென்றா ரச்செய லறியார்..... வித்தகப் பெருமான் விளக்கியென் றனக்குப் (ஞான அகவல்).** மெய் குருபிரானின் திருச்செயலையும், பொய் குருமார்களின் வேடத்தையும் கூறுகிறார்கள். ரவி, மதி, சுடர் என்ற முச்சுடராகிய அதன் செயலை இருதயத்தில் முச்சுடர்முன் னாடினிலை யெங்ஙே? என மெய்ன்னிலைப் போதத்தில் வரும் அத்தனை கேள்விகளுக்கும் உரிய விடையை ஒரே இடமாகிய இருதயத்தில் வைத்து சீடரிடம் போதிப்பவரே குரு எனவும், இதனை அறியாதவர்கள் போலிகள் என்றும் சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரர் தியாகராஜன்:* **அழகு அணி சித்தரின் கலித்தாழிசை பாடல் எண்-13:** நாட்டார் என்பது மனமாகவும், காட்டானை என்பது அறிவாகவும் வைத்து சித்தர் அருளியுள்ளார். இறை நாட்டமின்றி மனம் போன போக்கில் திரிந்த ஒருவனின் உள்ளத்தில் தன்னை அறியும் அறிவே தகுமறிவு, தன்னை அறிய தனக்கொரு கேடில்லை எனவும், இறை நிலை இன்னதெனக் காட்டி அதில் ஏற்றி வைக்கும் திருச்செயல் செய்யும் ஆசானே காட்டானை என்கிறார். **காப்பதற்குக் காட்டானை முன்னால் வேண்டும்** எனவும், **னாடினின்று காட்டானை வாலைப் பற்றி னலியாது மனமுறைக்க வெளியாம் வீடு** எனவும் மெய்வழி ஆண்டவர்கள்



Copyright © AMNA Trust, Chennai June 2023

அருளியுள்ளார்கள். வாலறிவனாக வரும் சற்குரு பிரான் காட்டும் வழியில் மனம் னலியாது நடந்தால் வீடுபேறு அடையலாம்.

**குருபிரான் அருளமுதம்: தெய்வத் தேடு கூடகம்: வஸ்த்து துதி:**

**அகமியம காமியம கூறின்**
**னகமியம தொலியெனவி னாவு...**

தெய்வத்தை தேடி கூட வேண்டிய இடம் அகமாக கூடுவான்சேரியாக இருப்பதால் தெய்வத் தேடு கூடகம் என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். ஒவ்வொரு மனு தலையினுள்ளும் அகரமாக சாகாத் தலையாக இருப்பதே வஸ்த்து. ஆண் தன்மையுள்ள அதுவே தனக்கு நிகரில்லாத தாளாக, அவன் எனும் ஏகனாக விளங்குகிறது. இதனை எதார்த்த உள்ளத்துடன் தேடுபவனே மனு. நாம் ஜென்மம் தோறும் செய்த கன்மங்கள் தீரவும், இடராக வரும் எமபயம் தீரவுமே ஆண்டவர்கள் தேடுகூடகத்தை அருளியுள்ளார்கள்.

காலனுக்கும் நமக்கும் உள்ள வழக்கு தீர வேண்டுமாயின் நமது மிடிமை இடர் ஒழிய வேண்டும். மெய் உணர்வு பெற அறிவு தெளிவிற்கான நூல்களை ஓயாது படிக்க வேண்டும். வாக்குடைய மலம் கடத்தும் வல்லபையின் வசம்படிந்த வாசத்தாலே என்பது **வடிவுடமைத் திடனடன அடவுடவை னடவ** எனும் ரகசியமாக உள்ளது. எங்கும் மே மக்களாக உள்ளோரே செவியில் சுவை உணர்வோர். கடலொலி போன்ற ஆலவாயானின் ஓசை கொண்ட திருநடனத்தில் நாட்டம் கொண்டு நடப்பவர்களே ஜென்ம சாபல்யம் பெறக்கூடிய புண்ணியர்கள் என்ற அருளுரையுடன் குருபிரான் அவையை னிறைவு செய்தார்கள்.

## 06-05-2023 ~ சனிக்கிழமை சபை
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

**உய்யவே யெனக்கும் முல குய்யவே...** என்ற தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

**எமபடரடிபடு கோடாயிதக் கூர் - வாக்கியம் எண் 127:** பிரகாச ரூபமாக கண்டு தரிசிக்க வேண்டிய, சர்வ மதங்களின் மூலமந்திரத்தையும் னிரூபணை செய்யவே மகாபுருஷராக அவதரித்து வந்திருக்கும் குலதேவ தேவேசராம் சாலை ஆண்டவர்களின் திருவடி பெருமையை, குரு பாரம்பரியமாக வரும் அருளாளர்களால் மாத்திரமே பேச முடியும்.

*ஜீவசகோதரி லாவண்யா :* **ஞான அகவல் - பாசாங்கு முரீதில் பருனெருப்பிட்டு...**
மெய் குருவை சந்திப்பதற்கு முன் ஈராறு குருமார்களிடம் பெற்ற பாசாங்கு உபதேச னிலைகளை னெருப்பிலிட்டு, ராஜாங்க யோகத்தின் மூலம் மனதை சுத்த சைதன்யமாக்கி மெய்ஞ்ஞான தத்துவ னிலைகளை அறிவித்து, இராப் பகலற்ற இடமாகிய ஞான ஆகாய பெருவெளியில் பார்ப்பானை தன்னுள் பார்த்திருக்க செய்து, கால் மேலும் தலை கீழாய் னிற்கும் தவனிலையில் னிலைத்திருக்க செய்த தன் ஐயனின் திருவடி பெருமைகளை இப் பாடல் வரிகளில் ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரர் விஜயகுமார் :* **பரிசுத்த வேதாகமம்**
**லூக்கா : 12:4** - *என் சினேகிதராகிய உங்களுக்கு நான் சொல்லுகிறேன். சரீரத்தை கொலை செய்து, அதன் பின்பு அதிகமாக ஒன்றும் செய்யத் திராணி இல்லாதவர்களுக்குப் பயப்படாதிருங்கள்.* ஆசான் அவர்களே தாய், தந்தை, சினேகிதராக இருந்து சீடனை வழிநடத்தும் சாட்சியே இத்திருவசனம். னம்பிய தன் உயிரை தற்கொலை செய்யும் அறியாமையில் இருப்பவர்களை கண்டு பயப்படத் தேவையில்லை என கர்த்தர் கூறுகிறார்.

**லூக்கா 24 : 39** - *நான் தான் என்றறியும்படி என் கைகளையும் கால்களையும் பாருங்கள். நீங்கள் காண்கிறபடி, எனக்கு மாம்சமும் எலும்புகளும் உண்டாயிருக்கிறது போல, ஒரு ஆவிக்கு இராதே.* னான் என்பது மாம்சமும் எலும்புகளும் உடைய உடல் அல்ல. உடல், புலன் பொறி கடந்த மா அம்சமுடைய பிரணவப் பொருளாகிய சர்வத்தையும் அனுபவிக்கும் ஆவிப் பொருள் என்பதை கர்த்தராகிய குருபெருமான் கருணையால், அனுபவம் மூலமே அறிய முடியும்.


Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரர் கோபி:* **ஶ்ரீமத் பகவத்கீதை - கர்ம யோகம்.**
கிருஷ்ண பரமாத்மா அர்ஜுனனுக்கு அருளியது. ஜனகர் முதலிய ஞானிகளும் பற்றின்றிக் கர்மங்கள் செய்து சிறந்த பேறு பெற்றது போல், நீயும் கர்மங்களைச் செய்வதே உனக்குரிய செயலாகும். ஞானம் பெற்றவர்களிடம் பன்மடங்காக பெருகும் அறிவு, சொல், செயல், ஆண்மை அனைத்தும் உலக சம்பாத்தியத்திற்கு என்றும் குறுக்கே னிற்காது. அர்ஜுனா! எனக்கு மூவுலகங்களிலும் செய்ய வேண்டிய கடமையும், அடைய வேண்டியதும், அடையப்படாததும், ஏதுமில்லாவிடினுங்கூட நான் கர்மா செய்வதிலேயே ஈடுபட்டுள்ளேன். முக்குணதால் உண்டான கர்ம வினையாலும், அகங்காரம் எனும் ஆணவ மலத்தாலும் மாயையில் சிக்கி அளவில்லா ஆசை எனும் காமத்தில் சிக்கி ஞானம் மறைக்கப்பட்டு பிறவிச் சுழலில் மாட்டிக் கொள்கிறோம். மிகவும் மேலான, நுண்ணிய, பலமுள்ளது ஆத்மா என்பதை அறிந்து, புத்தியினால் மனதை வசப்படுத்தி, ஜெயித்தற்கரிய காமம் என்ற சத்ருவைக் கொன்றுவிடு என பகவான் அர்ஜுனனுக்கு உபதேசித்தார்.

கர்த்தா - கர்மா - கிரியை என்ற மூன்றில், கர்த்தா என்பது ஜீவனாகவும் கர்மா என்பது ஜீவசக்தியாகிய பிராணனாகவும், கிரியை என்பது இவற்றால் உண்டாகும் செயலையும் குறிக்கிறது. வாயுவின் உற்பத்தி ஸ்தானமாகிய பிரம்மரந்திரத்தில் நாம் பழகும் செயலே கர்ம யோகம் என சுவாமி சிவானந்த பரமஹம்சர் அருளியுள்ளார்.

**குருபெருமான் அருளமுதம்: தெய்வத் தேடு கூடகம் :**
**னெடும் விரிபுவனந் நன்னில் னர ஜென்ம மெடுத்தோம்...** னீதியெனும் பொருளை அறியாத, மூலமந்திரத்தை பிரகாச ரூபமாய் காணாத, னெஞ்சத்தில் இடும்புள்ள யாவரும் னர ஜென்மமே. குருவருளால் இடும்பகன்று, னரனிலிருந்து மக்களாகி, தேவராக மாறும் திருச்செயலை உணர்த்துவதே தேடுகூடகம். அரிய மெய்வழியை உலக மக்கள் அடைவதற்கென வசந்த அழைப்பாக தேசிகர் தன் திருனடனத்தால் அருளிய திருப்பாடல் : **வாரும் உலகீரே செயற்றுறை தேரும் புவியோரே...**
பிரவாகமாக பெருக்கெடுத்து வரும் பெரு மொழியாகிய ஆசானின் ஓருருளை தேவ ரதமானது வாழையடி வாழையாக குருனெறியாக வந்து பனிப்படா னாவின் மூலம் னம் குறையாகிய னரஜென்மத்தை அறுத்தெறிந்து மனுவாக மாற்றித் திரலுறும் தவத்துறையில் தேவனாக வாழ வைக்கிறது. தேரை வாய்ப்பட்ட வண்டு தன்னிலை அறியாது வாயில் உள்ள தேனை உண்டு அற்ப இன்பம் னுகருவது போல், நாமும் சிற்றின்பத்தில் உழல்வதை உணர வைத்து, மெய்வழிக் குடியில் ஏற்றி திருவடிப்பேறு அளித்து, அறமணி முனிவர்கள் அனந்தர் ரிஷிகள் தேவராக னிலை பெற்று வாழச் செய்கிறார்கள். மனிதனை மகான்களாக்குகின்ற அருந்தவ மந்திர ஆராதனைகளை உள்ளடக்கிய அலிபு - லாம் - மீம் எனும் வேதமுடி இரகசியத்தை கைக்கொண்டவரும், 64 கலைகளுக்கும் மேம்பட்ட ஓர் கலையை அறிந்தவருமாகிய ஆதி மனு மகனின் ஒலிவா மலையிலிருந்து பிறங்கும் திருமொழியே நம்மை சிவனேசனாக சிறப்புற வாழ வைத்து கொண்டிருக்கிறது என்ற அரும்பெரும் னிலைகளை அருளிச் செய்து ஆசான் அவையை னிறைவு செய்தார்கள்.

**07-05-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஶ்ரீமதி. கவிதா வெங்கட்**

*ஜீவசகோதரர் கௌதம் :* கடலின் கரை சேர படகுக்கு துடுப்பு அவசியமாவது போல், பிறவிக் கடல் கடக்க ஆசான் அருளும் நாதமே நமக்கு துடுப்பெனும் துணையாகிறது. ஆசான் அருளால் மனம் அறிவாக மாறும் பிரம்மவித்தை செயலையே, சத்தியவேதத்தில் **மனம் திரும்புங்கள் பரலோக ராஜ்ஜியம் சமீபமாய் இருக்கிறது** என்றும், **உள்ளங்கையிற் கனி போல் உள்ள பொருளை உண்மையுடன் காட்டவல்ல உண்மை குருவை கள்ள மனம் தன்னை தள்ளிக் கண்டன்பாய் சுளித்துக் களித்து நின்றாடாய் பாம்பே** என பாம்பாட்டி சித்தரும் அருளியுள்ளார். சலனத்தினால் சார்ந்ததின் வண்ணமாகும் நீர் போன்ற மனதை நிச்சலனமாக்கி, தனது வாக்குத் தீயால் நமது பாவங்களை சங்காரம் செய்பவரே ஆசான். ஐம்பொறிகளின் வகை அறிவிக்கும் உலகம் எனும் அகமியத்தில் இருக்கும் கட்புலனாகிய அறிவை பெரியோர்களின் நாத தொனியால் அழியாமல் பாதுகாக்கவே **அறிவு ஒளிர ஆசானை தேடு** என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.


Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரர் மஞ்சுநாதன்:* வேதம், பஞ்சபூதங்கள், சைவம், அசைவம், பாவம், புண்ணியம், இவை யாவற்றையும் அவரவரிடம் அகமியத்தில் அறிய வைப்பவரே மெய் குருபிரான்.

*ஜீவசகோதரி மணிமொழி:* நமது தாகம் என்னும் மும்மலத்தை மும்மூலமாக மாற்றி வைக்கும் நம் போல் தேகம் உள்ள மெய்க் குருபிரானே, நம்மிடம் உள்ள மெய்ப் பொருளும், இறைவன் வழங்கிய தனிச் சீதனமான ஆறாவது அறிவும் இன்னதென உணர்த்த வல்லவர். ஆசானின் மெய்மணஞானமே நரனாக இருந்த ஒருவனை மனிதனாக்கி தேவனாக்குகிறது. படைத்த படைப்பனைத்தும் மனுவுக்கே என்பதை அறிய வைத்து, அறுசுவை கொண்டு ஒளிக்கும் இடமாகிய ஆறு ஆதாரத்தையும், ஐந்து எழுத்து மந்திரத்தையும் நம்மிடம் செயலாக்கி வைப்பது குருபிரான் அவர்களே.

*ஜீவசகோதரர் பார்த்திபன்:* மனதின் கீழ் நோக்கமான எண்ணங்களை மேல் நோக்கமாக மாற்றி வைப்பவரும், வேத சாட்சியாக வேதங்களை விளக்குபவரும், நாம் தன்னறிவில் சாயாமல் நன்னெறியில் புகுத்தாட்டி, செய்ய வேண்டிய கடமைகளையும் உணர்த்தி, நம்மை பிறவா நெறியில் ஆக்கி வைப்பதும் குருகொண்டல் அவர்களே.

**குருபிரான் அருளமுதம்:**

வெவ்வேறு நாமம் கொண்ட நாம் அனைவரும் நான் எனும் பொருளால் ஒன்றாகத்தான் இருக்கிறோம். நான் எனும் பொருள் அனுபவிக்கும் ஐம்புல நுகர்வில் எது மெய் எது பொய் என்பதை அறிய வேண்டும். **சமரச வேதம் சாலை அமரர்கள் னீதம்** என ஆண்டவர்கள் அருளியுள்ளபடி தன்பெருவெளியாகிய சாலையில் சமரசத்தை அறிந்து தேட வேண்டிய பொருள் இன்னதென அறிந்து அடைந்த மக்களாக நாம் வாழ்வோமாக.

## 07-05-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை

## தொகுப்பு: ஸ்ரீமதி. சண்முகப்ரியா

**திருவளர் திருவே ஷெய்குகள் ஷெய்கே…** என்ற குரு மணிமாலை பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

*ஜீவசகோதரி ஆர்த்தி:* பிரணவத்தில் குடி கொண்டுள்ள பிராணனாகிய அறுபுரிநூலின் ரகசியத்தை அறியச்செய்து, நம்மை பிராமணனாக்கி எமன் கண்டு அஞ்சக் கூடிய பஞ்சாட்சர மேனியின் அசையா நிலையாகிய அகமிய உலகத்தில் தெய்வத்தைக் கண்டு தொழச் செய்தும், தன் ஓர் எழுத்து மாத்திரைக் கோல் மூலம் மறலியின் வாதனையிலிருந்து தப்பிக்கும் ரகசியத்தை வெளியாக்கியும், அம்பலவராகத் திகழ்பவரே சற்குரு பெருமான்.

*ஜீவசகோதரி கனகத்தாய்:* அசைவற்ற அனாதியாகிய சிவத்திலிருந்து அசைந்து வருவது ஆதியாகவும், சக்தியாகவும் உள்ளது. அது **கு** என்ற அறியாமை இருளிலிருந்து **ரு** என்ற அறிவுப் பிரகாசத்திற்கு அழைத்துச் செல்கிறது. இருளானது இரண்டு வகையாக, நன்மை பயக்கின்ற காருண்ய கறுப்பாகவும், அறியாமை எனும் இருளாகவும் உள்ளது. ஜீவனைக் கண்டு ஜென்ம சாபல்யம் அடைவதற்கு மனிதனுக்கு தனிச்சீதனமாக கொடுக்கப்பட்ட ஆறாவது அறிவை புறத்தில் அலைய விடாமல் ஓரறிவாக மாற்றும் செயலே பிரம்மவித்தை. இதனை அறிய, அறிவை அறிந்த ஆசானின் துணை அவசியம் வேண்டும்.

*ஜீவசகோதரர் சோலையப்பன்:* ஐம்புலன்களால் விரயம் ஆகும் காலம் மனதின் செயலாக உணர்ச்சியாகவும், ஆசான் அருளால் ஐயறிவு உணர்ச்சியில் இருந்த மனம் ஆறாவது அறிவின் மூலம் அறிவாக மாறும்போது உணர்வாகவும் உள்ளது. அதுவே உச்ச நிலையாகிய இறைநிலையை அடையும்போது உணர்வுகார ரகிதம் என மாறுகிறது. உணர்வாகிய ஜீவாத்மா, உணர்வுகார ரகிதமாகிய பரமாத்ம நிலைக்குப் போக அன்னிலையை அனுபவித்தறிந்து வந்த ஆசானின் அருளே மூலதனமாக உள்ளது.

*ஜீவசகோதரர் கார்த்திகேயன்:* **சும்மா இருக்க சுகம்** என திருமந்திரத்தில் திருமூலர் பெருமான் அருளியுள்ளார்கள். சும்மா என்ற சொல்லை உச்சரிக்கும் விதத்தில் பலவிதமாக பொருள்படுகிறது. மூச்சானது ஓர்னிலையில் நின்று, மனம் அலையாமல் இருப்பதே சும்மா



Copyright © AMNA Trust, Chennai 

இருப்பது. மனிதன் நித்தியன், சாகப் பிறந்தவன் அல்ல. குருவின் அருள் கிட்டினால் பிறவிப் பிணிக்கடல் தாண்டி நித்திய சொர்க்கத்திலும், இல்லாவிடில் நித்திய நரகத்திலும் வாழ்கிறான். பிரக்ஞான பிரம்மம் எனும் உணர்வே ஜீவனாக இருப்பதை அறிந்திட பொய் உணர்வு மாறி மெய்உணர்வாக ஓரறிவாக வேண்டும். அதற்கு தன்னில் ஜீவனாக, ஜோதியாக, அறிவாக, கவனமாக இருக்கும் நான் எனும் பொருளை இந்த உடல் இருக்கும் போதே மெய்யான குருபிரானின் துணை கொண்டு அறிய வேண்டும்.
*ஜீவசகோதரி விஜயசித்ரா:* **சாதி, சமயம்:** ஒன்றே குலம் ஒருவனே தேவன். எல்லோரும் சுக்கிலம் எனும் ஓர் சுக்குலத்தில் பிறந்தாலும் ஜாதி, சமயங்கள், குலங்கள் எனும் வேற்றுமை நீங்காது. தேகம் உள்ள வரைக்கும் நீங்காதது சாதிச் சண்டை.

**புறங்கிடந்த சமயங்களீ ராறிலும்கண் குருடன்**
**பெருமைவஞ்சும் சூதுகொலை வளர்குலத்தின் குருடன்**

மன அறிவு கொண்டு உண்டாக்கப்பட்ட புறச்சமயங்களே வேற்றுமையை வளர்க்கின்றன என்பதற்கு சாட்சியாக, வள்ளுவர் வாழ்ந்த காலத்திலும் அவர் தனது ஞானவெட்டியான் என்ற நூலில், **மாலப்பறையன் என்றே உலகர் கூடி வாய் பிதற்றி வழக்கு வாதாடுவர் காண் பாலர் அறியாமல் என்னை பழித்து பகடித்தனர் ஆண்டே** என கூறியுள்ளார். சாவுக்கு எட்டி தீ வைப்பதுவே சாதி எனவும் சாதியை என்னவென்று அறிந்து கொள்ளக்கூடிய பழக்கத்தில் நின்று சாதிப்பது உயர்ந்த ஜாதி எனவும் ஆண்டவர்கள் அருள்கிறார்கள். தன்னை அறிந்து சிவமான சாதியே பெரிய சாதி என்கிறது சிவானந்தபோதம்.

**மதம்:** அவரவரின் உயிராக ஜீவனாக இருப்பது மதம். யாவர்க்கும் மதப்பற்றுண்டு. எல்லா மதத்திற்கும் கட்டாயம் எமன் உண்டு. அடங்காது மதம் கொண்டு நிற்கின்ற மன ஓட்டத்தை அடங்கி ஒடுங்கும்படி அடக்கி ஆளுகின்ற மகா தவ வல்லபமே மதம் என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

**குலம் :** னீதியாகிய அமானிதப் பொருளை அறிந்தவனே மனுக்குலத்தின் மேலோன். குலங்கள் எல்லாம் புழுக்குலம் எனவும், புத்தமுதம் உண்டோங்குவதே புனித குலம் எனவும் வள்ளல் பெருமான் உரைக்கிறார்கள். ஞான சைதன்ய அரசு சுப்பிரமணியர் அவர்கள், **நானடா நானிருக்கும் இடம் தான் குலதெய்வம்** என குறித்துச் சொல்கிறார்கள். நான் என்பதை அறிந்து கொண்டால் தான் குலத்துக்கு உரியவனாக ஆக முடியும் என்பதை **தலைவன் தனை அறிந்தவனே குலத்தோன்** என ஆண்டவர்களும் அருளியுள்ளார்கள். தூலப் பிணிக்குலம் வேரறுத்து ஓட்டிட, புழுத்தலைச் சோம்பேறிக் குலங்களின் நேசத்தை விட்டு, மெய்யர் வழிக் குலத்தில் சார்ந்து, தெய்வ மீட்புக்குலக் குழுவாம் ஒலிவாமலையாகிய குல தெய்வத்தைச் சார்ந்து, குருகுல வாசமாய் இருந்து, அருள் அமுதத்தை உண்டு, மறலி வெருண்டோடுகின்ற வான் குலத்தில் பிறக்க சமரசமும் சமத்துவமும் வரும்.

**குருபெருமான் அருளமுதம் :**
அறுசுவை கொண்டொளித்த ஆரூரான் இருக்கும் இடத்தை அறிந்தவனே அமரன். அவனே ஜீவான்மாவில் வாதை உடல் நீக்கிக் கலந்து தான் தானாகி நிற்கும் செயலைக் கைப்பற்றியவன். சர்வ மதங்களின் குறிக்கோளும் மறலிகை தீண்டாமையே. **உரை பெறும் என் தனித்தந்தை வருகின்ற தருணம் உற்றறிவண் உற்றிடுவீர் உண்மை உரைத்தேனே** என வள்ளல்பிரானால் போற்றப்படும் தனித்தந்தையை ஈஸ்வரா! ஈஸ்வரா! என பிச்சுலகர் மெச்சப் பிதற்றி நிற்கும் அறியாமையை அகற்றும் செயலை கைக்கொண்டு இருப்பவர்கள் ஆதி மார்க்க நீதி அவையின் அங்கங்கள் என்ற பகிர்தலுடனும் தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.

*புவியில் தாபத்ரய மென்னும் அக்னியால் தகிக்கப்பட்ட சாந்நமின்றிய பிராணிகளுக்குக் குருவே மேலான கங்கையாவர். (ஆதலால்) அத்தன்மைய ஸ்ரீ குருவிற்கு னமஸ்காரம்.*
***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

**11-05-2023 ~ வியாழக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்**

**என்னமோ வென்று வும்மை யெண்ணிவிட் டிருந்தே னின்னாள்** என்ற தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. மெய் மகத்துக்கள் மனுக்குலம் உய்வதற்கென வேதமா மறைகளில் பரிபாஷையாக அருளியுள்ள ஜென்ம சாபல்ய செயலை உணர்கின்ற காலமே, மனுக்களுக்கு வசந்த காலம்.

**வான்மதிக் கொரல் திருவாக்கியம் எண் 112:** மெய்வழியில் சேர்ந்துகொள்ள மலையாள மொழியில் ஒருவர் அனுப்பிய கடிதத்திற்கு ஆண்டவர்கள், எம்மிடம் சத்திய ஒட்டுதல் கொண்டவனுக்கு பாஷை தேவையில்லை எனவும், மெய்யை பரீட்சிக்க தேவ பாஷையாகிய தமிழ் வேண்டும் எனவும் அருளியுள்ளார்கள்.

**குருபிரான் அருளமுதம்:** தெட்சிணாமூர்த்தி நால்வர்க்கு அருளிய மௌன மொழியே ஞானத்திற்கு பாஷை தடை இல்லை என்பதற்கான சான்று. செம்மொழியில் ஒன்றான தமிழே இறைவனை அறிவதற்கான தேவபாஷை.

*ஜீவசகோதரர் வெங்கடேசமுத்து:*

**ஏரின் உழாஅர் உழவர் புயல்என்னும்**
**வாரி வளங்குன்றிக் கால்.** **(திருக்கொரல் 14)**

மழை இல்லையேல் உழவுத் தொழில் பாதித்து பஞ்சம் ஏற்படும் என்பது உலகியல் அர்த்தம். உழவு செய்யாத ஐயறிவு ஜீவ பேதங்கள் பசியோடு இருப்பதில்லை என்பது நிஜம். உடலுக்கு உணவு போல், உயிருக்கு உணவாக இருப்பது மெய்ஆசானின் நாதமாகும். நிலத்தின் தன்மையை அறிந்து பலன் எடுக்கும் சிறந்த உழவர் போல் உயிருக்கான உணவாகிய ஜீவப்பயிர் என்னும் அறத்தை வழங்குபவர்கள் மெய்மகத்துக்கள்.

**குருபிரான் அருளமுதம்:** புயல் கொண்டு வரும் மழை போல் பிரவாகமாக எழுச்சியுடன் வரும் பெரியோர்களின் வாய்மையே நாம் கேட்டதும் கேளாததும் தருகின்ற கற்பக தருவாக உள்ளது.

*ஜீவசகோதரர் தியாகராஜன்:* **உச்சிக்கு கீழடியோ ஊசி முனை வாசலுக்குள் (அழகு அணி சித்தர் பாடல் - 14)** எண்சான் உடலுக்கு பிரதானமான சிரசினுள் இருக்கும் பத்தாவது வாசலறிய ஆசான் தயவு வேண்டும். **ஊசி முனை தமர் திறந்து ஏறவென்றால் அழையாமற் போவதற்கு யாராலாகும் அந்தரியே சுந்தரியே அருள்தா வென்றும்** மெய்வழி ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். வானுதிரம் எனும் ஆசானின் நாத துணையுடன் மச்சின் மேலேறி காற்றை பிடிக்கும் கணக்கறிந்தால் வகை மோசமாகாமல் எமனை வெல்லலாம்.

**குருபிரான் அருளமுதம்:** பட்டமும் கயிறு போல் பறக்க நின்ற ஜீவனை ஆசானின் துணையுடன் அல்லலுறும் 9 வாசல் கடந்து 10வது வாயிலின் ரகசியமறிந்து காத்திடலாம்.

**தெய்வத் தேடு கூடகம்: நரஜென னமெடுத்தன் னரகிலி ழிந்திடாது அரியமெய் வழியடைந் நாளுந் தேவரென...** மெய் ஞானிகள் இறைவனிடம் வேண்டியது பிறவாமை ஒன்றே. ஒலிவா மலையின் நாதமே ஒருவனை சைவ நிலைக்கு மாற்றுகிறது. இமைய மேருவில் ஈசனின் னாவாக, நாதம் விளைந்தவரே ஓங்குறு பூமியாக வருகிறார்கள். அறுகோணச் சக்கரமே, அறியாதவனுக்கு பொற்பு எனும் எமனாகிறது. முச்சுடர் அறிய ஆசானின் கயிலை னா ஆட ஆனமறுபிறப்பு பூமியில் பிறக்க வேண்டும். மனிதன் வாங்கி வந்த அமானிதக் கடனை நினைவூட்டவே வேதமும் அதன் கர்த்தர்களும். முக்காலமும் விளங்கும் அகமிய அடையாளமாகிய தீர்க்கதரிசன செயல் குறித்தே வள்ளல் பெருமானும் இதனை பெற்றீர்கள், பெறுகின்றீர்கள், பெறுவீர்கள் என அருளியுள்ளார்.

*ஜீவசகோதரர் சிரஞ்ஜீவி:* **ஏறா நிலைமிசை ஏற்றி எந்தனுக்கு ஆறாரு காட்டிய அருட்பெருஞ்ஜோதி (அருட்பா அகவல்)** ஆறாரு எனும் 36 தத்துவம் சிவத்தையும் அதன் தன்மையையும் 12 ராசி மற்றும் 12 சமயங்களை குறிப்பதாகவும் உள்ளது. **பராபரமான னிராதாரத்தை தேர்வது அவரவரின் கல்புக்குள்ளே** என மெய்வழி ஆண்டவர்கள்



Copyright © AMNA Trust, Chennai

அருளியுள்ளார்கள். மனித தேகமெடுக்க காரணமான ஆறு ஆதாரம், இருதயத்துள் நின்று இலங்குவதை மெய்குருவின் அருளால் அறியலாம். காயமாகிய தேகத்தில் கரத்தால் திரிக்க பெறாத கயிறான காயத்ரியாக இறைவன் இருப்பதை அறிய வைப்பதே அருட்பெருஞ்ஜோதி.

**குருபிரான் அருளமுதம்:** நிராதாரமான பராபரம் என்பது **பளுவெலாம் விழுங்கி பளுவெலாம் கடந்து பளுவற்றிருந்த பாரப் பருவத பராபரம்** என மெய்வழி ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். உள்ளும் புறம்பும் பூரணமாக இருப்பதை அருள்பவர் கர்த்தர். **பவக்கடல் தவிக்கும் மாந்தரை கரைசேர் பருமரக்கலன் கிடைத்தது போல் சிவகுருவரதர் தனிகையர் குமரர் தெய்வ மெய்வழிச்சபை பெருகும்** என அருளிய ஆசீர்பாத ஒலிவாயுரை, ஆதி மார்க்க னீதியின் வழியாக இன்று அடியார்களின் இதயக்கமலத்தில் நிறைவேறிக் கொண்டிருக்கிறது என்ற பகிர்தலுடனும் தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.

### 13-05-2023 ~ சனிக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை
### தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்

**ஆரணம் கடந்த பூரணக் கடலே அன்பர்க ளகங்குளிர் கடலே...** என்ற தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் கௌதம் :* ஓர் மெய் ஆசான் அவர்களின் சீதக்களப செந்தாமரை பூம்பாதத்தின் னாதமே நமது வினை, கொடிய மிடிமையிடர், கெடுமை கவலையிருள் இவற்றை விலக்கி என்றும் அழியாத னித்தியத்தில் நம்மை குடியேற்றி வைக்கின்றது. திருஆலவாயான் திருனீரே, அகமியத்தில் நம் சொந்த உலகைக் காணவும், தீரமுள்ள தீன் பாதத்தை பணியவும், பரிபூரணமாக விளங்கும் கலிமாவை அறியவும் வைக்கிறது. நம் நாமத்திற்குரிய பொருளை அறியாமல், நாம் மனவழியில் செல்லும் வரை எமனுக்கு உரியவனாகவும், ஓர் மெய் குருபிரானின் பேரிரக்கத்தால் அறிவு வழியில் சென்று நாமத்திற்குரிய பொருளை அறிகையில் சிவனுக்கு உரியவனாகவும் ஆகின்றோம். மனதின் வழி சென்று, பந்த பாசத்தில் சிக்கியிருந்த நம்மை, பாசவேரறுக்கும் பழம்பெரும் பொருளை அறிவித்து, நமது மும்மலத்தை கருக்கி, முச்சுடர் தோன்றச் செய்து, நாம் வாழும்போதே அடக்கமெனும் முக்தி அடைய வைப்பவர்களே மெய் ஆசான்.

*ஜீவசகோதரர் வெங்கடேசன்:* காவி உடை அணிந்து, கண்மூடித்தனமான வழிபாட்டில் கடவுளை அடை முடியும் என எண்ணி, தன் வயது வாழ்னாளை வீணாக்கும் ஒருவனுக்கு, தனது கடத்துள் இருக்கும் கடவுளாகிய பொருளை அறிந்து அடையச் செய்து நித்திய வாழ்வில் குடியேற்றி வைப்பவர்களே மெய்க் குருபிரான்.

*ஜீவசகோதரி கவிதா வெங்கடேசன்:* ஞான சூரியனான ஆசான் தன் அருளால், நமது அறியாமையை அகற்றி, ஆறாவது அறிவை அறிய வைத்து, நவ கிரகங்களின் பிடியிலிருந்து நம்மை விடுவித்து, அரி துயிலாகிய தூங்காமல் தூங்கும் பிரம்மவித்தையை நம்மிடத்தில் செயலாக்கி வைக்கிறார்கள். சாலை ஆண்டவர்களின் ஆசீர்பாதத்தால் இத் திருச்செயலானது இன்று ஆதி மார்க்க நீதி அவையின் அங்கங்களுக்கும் வாய்த்திருப்பது சத்தியமே என்ற பகிர்தலுடனும் தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே னிறைவுற்றது.

### 14-05-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை
### தொகுப்பு: ஸ்ரீ. ஜெய்குமார்

**அறங்க ளொருங்குதி ரண்ரடொரு வீடுவ ரங்கொடை யின்பெருமான்...** என்ற தோத்திரப் பாடலுடன் அவை இனிதே உதயமானது.

*ஜீவசகோதரி கல்பனா :* அனைவரிடமும் உயிராக, ஜீவனாக, தெய்வப் பதியாக, காலத்தின் ரகசியத்தை உள்ளடக்கிய தமிழ் மொழி என்பது படிப்பதன்றி பழகுவதாக உள்ளது. அறிவு வடிவாகிய தமிழ் அமுதத்தை ஆசான் அருளால் அறிந்தவர்களே தேவர்கள். இதனை



Copyright © AMNA Trust, Chennai 

ஆண்டவர்கள் **அமுதஞ்ஞிந் நுந்நமிழே** எனவும், **தில்லைய முதமெ னக்கெடுத் தூட்டினீ தித்தித்த னாள்முதலாய்** எனவும் அருளியுள்ளார்கள். உயிராக, மெய்யாக, உயிர் மெய்யாக உள்ள சங்கத்தமிழே ஔவையார் தன் குருபிரானிடம் வேண்டியது. இதுவே முப்பொருளில் நடுவான ஒன்றான ஓம் எனும் பிரணவமுமாகும். ஃ எனும் ஆயுத எழுத்தே பிரம்மமாக உள்ளது என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். பிறவிப் பெருங்கடலில் இருந்து நம்மை கரை சேர்ப்பது ஆசானின் நன்னாதமே. உயிருள்ள போதே நான்கு தேக ரகசியம் தன்னிலறிந்து அதில் குடியேறி வாழ்பவர்களே பிறவா நிலை பெற்ற சாகாத சன்மார்க்கிகள்.

**நம்பிய தன்னுயிர் தற்கொலை செய்வான் னமசிவ இருப்பறியான்** என ஆண்டவர்கள் அருளியுள்ளபடி நமது ஒவ்வொரு சுவாசத்திலும் மரணம் நிகழ்வதை நாம் அறியாமல் உள்ளோம். ஆசான் அருளால் தன் ஜீவனைக் கண்டு ஜென்ம சாபல்யம் பெற்றவனே ஜீவாத்மா. நம் ஜனன வாசலே செத்திடமாகவும், உறங்கி விழிப்பது பிறப்பிடமாகவும், பொறிகள் ஓடாத இடமே இனி சாகாதிருக்கும் இடமாகவும் உள்ளது. வினைப் போகமே வடிவான இத்தேகத்தின் வினைகளுக்கு காரணமான முக்குணங்களை அறுக்கும் செயலையே, ஆண்டவர்கள் **ஒருதிரு தரிசனை இருவினை போக்கிடும்** என அருளியுள்ளார்கள். எழுவகை தோற்றத்தில் ஒன்றான அமரன் எனும் தோற்றமே நம் வினையறுத்து மனதற்ற பரிசுத்த நிலையில் நம்மை ஆக்குகிறது.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* ஆதியில் தோன்றிய இறைமொழியே தமிழ். சர்வ மத மந்திரங்களும் குறிக்கும் அவரவர் நாமமாகிய மெய்யை, மெய்யாக நிரூபிப்பதே தமிழ். பேரொளியாக, ஞான சூரியனாக, முக்கூர் கத்தி எனும் மந்நிரவாளாக, எமபடரை நீக்கும் வல்லபம் கொண்டு வாழ்நாள் வீணாகாமல் காப்பதுவே சாலைத் தமிழ். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி எனும் ஐந்து இலக்கணத்தை உள்ளடக்கிய முதல் பாஷையே செம்மொழிகளில் ஒன்றான தமிழ். அருவுருவாய் நம்மை ஆண்டு கொண்டிருக்கும் விண்ணின் பாதமாகிய பிள்ளைத் தமிழே, எமனை வெல்லும் பெரியோர்களின் நாவின் முனைச் சாட்டையாகத் திகழ்கிறது. ஊமை எழுத்தாகிய ஏகாட்சரமே வித்தில்லா வித்தாகிய எழுதாத எழுத்தாக விளங்குகிறது. மகா ஆண்மை பொருந்நிய மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே நாடகத்தமிழ் வடிவில் தெய்வத்தேடு கூடகத்தை அருளியுள்ளார்கள். னாத வடிவமாகிய தமிழே முன்னே துவர்க்கும் பின்னே இனிக்கும் பாஷையாக, எழுகணுக் கரும்பாக, அமானிதத்தின் ரகசிய பெட்டகமாக உள்ளது. நிச்சயமாகிய மரணத்தை நினைந்து அதனை நீக்கும் உபாயத்தை மெய் உணர்வுடன் தேகமுள்ள போதே ஆசான் அருளால் அறிய வேண்டும்.

*ஜீவசகோதரர் சங்கர்:* பிதா சுதன் பரிசுத்த ஆவி எனும் மூன்றில் சுதன் எனும் பிள்ளையாகிய உயிரினையே பிள்ளைத் தமிழாகவும், மேலும் உயிரெழுத்தின் ரகசியங்களை அறிவு அறி பாடத்திலும் ஆதி மான்மியத்திலும் சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். சக்தி வடிவாகிய ஜீவனின் போக்குவரத்தாகிய தொனியை இறைவனின் புகழ் பாடுவதற்கு மாத்திரமே உபயோகிக்க வேண்டும். பிற மொழிகளின் ரகசிய பரிபாஷைகளை அம்பலமாக்கும் வல்லபம் கொண்டதுவே தமிழ். பசு எனும் ஆன்மாவானது பாசமாகிய மனதுடன் சேராமல் பதியாகிய இறைவனுடன் சேர்ந்து அத்வைத நிலையில் வாழ்வதற்கு வழி காட்டும் அவையாக இன்று ஆதி மார்க்க னீதி அவை திகழ்கிறது என்ற பகிர்வுகளுடனும் தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.

## 18-05-2023 ~ வியாழக்கிழமை சபை
## தொகுப்பு: ஸ்ரீமதி. பூர்ணிமா ஜீவானந்தம்

**அங்கம திடத்தி லைம்புலக் கதவை யடைக்கும்பே ரறிவெனக் கருளி...** என்ற தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:**
ஐம்புலக் கதவை அடைத்து சரண கமலாலயத்தில் அரை நிமிட நேரம் கலந்து வரும்பொழுதே பேரறிவு உண்டாகிறது. பேரறிவிற்கான அடையாளமே வாய்மை.



Copyright © AMNA Trust, Chennai 



**வான்மதி கொரல் வாக்கியம் எண் 113:** சாலை ஆண் குரு என்ற கையொப்பத்துடன் மெய்வழிச் சபையாரின் வெளியீடாக வந்த அறிவைத் தேடு என்ற நூலை பலருக்கும் கிட்டும்படி செய்பவர்களுக்கு மகா மேம்பாடான திட்டமான புண்ணியம் கட்டாயம் வலிய வந்து கிட்டும் என்பது மெய்வழி ஆண்டவர்களின் ஆசீர்பாதம்.
**குருபிரான் அருளமுதம்:** மெய்யான அறிவைத் தேடி வருகிறவர்கள், பாவச் செயலில் நஷ்டமடையாமல் இருப்பதற்காக புண்ணியத்தின் உருவான மெய்க் குருபிரான் அவர்களுக்கு கிட்டுகிறார். இதனை தாயுமான சுவாமிகளும், **மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினோர்க்கு ஓர் வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே** என்கிறார்.

*ஜீவசகோதரி லாவண்யா:* **னெஞ்ஞுமு னழுவி னிறைந்த பூரணத்தில்...** என்ற **ஞான அகவல்** பாடல். வாசனை கேள்வி இருகண் வாய் எவைக்கும் வல்லமை அளிக்கும் அக்கண் எனும் பிரம்மம், பூரணமாக மூவுலகிலும் ஊடுருவி நிற்கும் கலிமா பொருளாக உள்ளது. இதை அறிவதே சரிகத் ஒழுக்கம். தேவர்களும் அறியாத அரும்பத வடிவைக் கண்டு களைப்பெலாம் தீர்ந்து காணும் காட்சியானது, ஏதுமிலதாய் யாதும் உளதான மின்னல் கிரணமாக உள்ளது.

*ஜீவசகோதரர் வெங்கடேசமுத்து:* **திருக்கொரல் - வான் சிறப்பு:** மழையையும் அதனால் உண்டாகும் நன்மை பற்றியுமே புறவுலக விளக்கங்கள் உள்ளன. மழை நீரும், ஜீவனுக்கான உணவும் பரிபாஷையாக கூறப்பெற்றதே வான் சிறப்பு. அனுமன் கொண்டு வந்த சஞ்சீவி போன்று, ஆசான் அருளும் நாத மருந்தே வான்சிறப்பாக தூவும் மழையாக உள்ளது. பெரியோர்கள் உழவுகோல் கொண்டு நம் மனதை பண்படுத்தி ஜீவப்பயிர் வளர அருளும் நாத மழையே வான்சிறப்பு. தருக்கினத்தை வளர்விக்கும் வான்மழை போல் ஆகாய கங்கையாக வரும் ஆசானின் அருள் மழை நம் செருக்கை அகற்றி ஜீவப்பயிர் வளர்வித்து பிறவிப் பிணி தீர்க்கிறது.

*ஜீவசகோதரர் தியாகராஜன்:* **அழகு அணி சித்தர் பாடல் 15 மூக்கால் அரும்பெடுத்து மூவிரண்டாய்த் தான்தூக்கி ...** மூக்கு என்பது முச்சுடர், திரிவேணி சங்கமம் என அழகணி சித்தர் அருள்கிறார். மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஆண்டவர்கள் என மகாசங்கல்ப மந்திரத்தில் சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். ஆசான் அருளால் மூக்கறிவு பெற்றவர்களே தன்னை அறியும் செயலாகிய பிரம்மத்தையும் ஜோதி என்ற நாசி முனையையும் அறிய முடியும்.

*ஜீவசகோதரர் சிரஞ்ஜீவி:* **ஐயமும் திரிபும் அறுத்தெனது உடம்பினுள் ஐயமும் நீக்கிய அருட்பெருஞ் ஜோதி (அருட்பா பாடல்)** அழிவதை அழியாததாகக் கருதுவதே திரிபு ஆகும். அழியும் இருள் தேகத்தை பிரகாசமாக ஆக்குவதே ஆறாவது அறிவு. மற்ற ஜீவபேதங்களுக்கு இல்லாத மரண பயத்தை கண்டு அஞ்சும் மனிதனுக்கு அபயம் அளிப்பது மெய்வழி. நம் அறியாமை எனும் இருள் வீட்டில் குடியிருக்கும் மனப்பேயை ஓட்டி அறிவுப் பிரகாசமாக்கும் ஆசானின் கொண்டல் வாய்மையே அருட்பெருஞ்ஜோதி எனும் தனிப்பெருங்கருணையாக உள்ளது.

**குருபிரான் அருளமுதம்: தெய்வத் தேடு கூடகம்**

நம்மை வழி நடத்தும் மூலமணிப்பதி எனும் நந்தியே அகரப்பொருள். புறவுலகில் ஒலிவாமலை, கல் மண் நிறைந்த இடம். அங்கு தேடிச் செல்லும் தேடு கூடகர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியபின், மனித சட்டை இட்ட பேய்கள் புல், பூண்டு, முட்கள், பாம்புகளாக, நன்மை செய்வதாக எண்ணி, பாவம், துக்கம், துயரங்களைப் பற்றிக் கொண்ட தூசுகளாக,



Copyright © AMNA Trust, Chennai 

நரனாக இருக்கும் நம்மைக் கடந்தே, முற்காலத்தில் பல நாமங்களுடன் வந்த தங்கள் திலக பிரானைத் தேடி, ஒலி ஒளியாகிய நாத போதையெனும் ஊர்த்துவ வாடை வரும் தென்திசை நோக்கி வருகிறார்கள். வேதங்களில் சொல்லப் பெற்ற வார்த்தைகள் நிஜமாகும் போதே அவை நமது சொந்தமாகின்றன. பிரிவினை பற்றி பேசாமல், எல்லா துன்பங்களையும் தாங்கி, வையகம் உய்வதற்கான ஓர் வார்த்தை அருள்கின்ற ஞானிகளே, நரனை மனிதனாக்கி தேவனாக்குகின்றனர் என அருளி தோத்திரப் பாடலுடன் குருபிரான் அவையை நிறைவு செய்தார்கள்.

**20-05-2023 ~ சனிக்கிழமை சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்**

**வான வேதாந்த சஞ்ஜீவி - குரு வள்ளல் கொடுத்த வாசுகியின் சஞ்ஜீவி** என்ற ஆனந்நக் களிப்பு பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் வாக்கியம் எண் 128:** குழந்தை பிறந்தவுடன் குவா குவா என்று சத்தமிடும் ஆதிமூல இடத்தை அறிந்து அடைவதுவே வீடடைதல். தெய்வ வாக்கின் படி, ஆசானின் அனுக்கிரகத்தால் மறுபிறப்பு பெற்று, மனிதனின் அடையாளப் பொருளை அகமியத்தில் அறிந்து அடைந்தவர்களே தனது சொந்த வீட்டில் குடியேறி பேரின்ப பெருவாழ்வு வாழ்கிறார்கள்.

*ஜீவசகோதரி லாவண்யா:* **ஞான அகவல்** - **பிணை னிகரில்லா பெருவான் கடையை எனையுணரென்று எனையறிவித்தார்...** தனக்கு உவமை இல்லாதான் தாளான திருவடியை, ஓசை கொண்ட நடனத்தால் உணர வைத்து, பெருவான் கடை விரித்து முரீதின் மூலம் தலையான தலையை அறிவிக்கும் காமீலானவர் மண்ணூழி ஊழி காலமும் வாழ்ந்து, தான் பெற்ற சிவானுபவத்தை தன் மக்களுக்கு ஞான அகவல் கொண்டு னாட்டும் கண்மணி னாயகத்தின் காட்சியே முரீதாக அமைகிறது என்ற மெய்ச்செயலை உணர்த்திய மெய் குருவின் பாதம் பணிகிறேன்.

*ஜீவசகோதரர் விஜயகுமார் :* **பரிசுத்த வேதாகமம்**
**ஜான் அதிகாரம் : 5** - *பிதாவானவர் மரித்தோரை எழுப்பி உயிர்ப்பிப்பது போல், குமாரனும் தமக்குச் சித்தமானவர்களை உயிர்ப்பிக்கிறார்.*
ஒவ்வொரு மூச்சும் துண்டாடப்பட்டு மரித்துக் கொண்டே இருப்பவர்களை பிதாவானவர் எழுப்பி னீதித் தீர்ப்பளித்து **கு** எனும் இருளிலிருந்து மாற்றி குமாரனாக உயிர்பிக்கிறார்கள். தன்னைப் போன்றே உயிர்ப்பிக்கும் வல்லபத்தை குமாரனுக்கு அளித்ததால், அவரும் தனக்கு சித்தமானவர்களை உயிர்ப்பிக்கிறார்.
*குமாரனைக் கனம் பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவையும் கனம் பண்ணாதவனே.* கயிலாயப் பரம்பரையாக வரும் குருபீடத்தில், மெய்ஞானம் பெற்று வரும் சீடனாகிய குமாரனின் வார்த்தைகளை கனம் பண்ணாதவன் குருவின் வல்லபத்தை கனம் பண்ணாத மூடனாகி அறியாமையெனும் இருளில் மூழ்குவான்.

*ஜீவசகோதரர் கோபி:* **ஸ்ரீமத் பகவத்கீதை - ஞானகர்ம சன்யாஸ யோகம்**
அஷ்டாங்க யோகத்தின் மூன்றாவது னிலையான சன்யாசம் என்பது, இவ்வுலக வாழ்வில் பற்றின்றி வாழ்வதாகும். சாதுக்களை கடைத்தேற்றவும், பாவிகளை அழிக்கவும், தர்மத்தை நிலைநாட்டவும் நான் யுகந்தோறும் யுகந்தோறும் வருவேன் என ஸ்ரீ பகவான் அர்ஜூனனிடம் கூறுகிறார். முக்காலமும் உணர்ந்த சர்வ வியாபியாகிய குருபிரானின் னாதமே நம்மை உயிர்ப்பித்து, ஞானம் அடைய தடையான பயம், கோபம், ஆசை மூன்றையும் வேரறுத்து கர்ம யோகத்தில் பழக வைக்கிறது. அதன் பலனாக, **மாத்ரு தேவ பவோ - புத்ரு தேவ பவோ - ஆச்சார்யா தேவ பவோ - அதிதி தேவ பவோ** என்ற **தாய் – மகன் – குரு - பிரம்மம்** என அருள் பாலிக்கும் சர்வ வியாபக தத்துவத்தின் நான்கு நிலைகளை அடையலாம் என ஞானகர்ம சன்யாஸ யோகம் மூலம் பகவான் அருளியுள்ளார்.


Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரி ஜீவிதா:* **கைலாய கம்பளிச்சட்டை நாயனார் திருவரலாறு**
***பிறப்பு -*** ஆவணி மாதம், நட்சத்திரம் - மிருகசிரீடம், வாழ்நாள் 800 வருடங்கள் என்பது சரித்திர சான்று. ***சமாதி ஸ்தலம் -*** சீர்காழி சட்டநாதர் ஆலயம். ***குரு -*** போகர் பெருமான். ***திருநாமத்தின் சிறப்பு :*** அறிவிருக்கும் தலமிருந்து ஆசான் பொழியும் நாத மழையே, நம் மரணக் குளிர் நீக்கும் ஜீவனுக்கான கம்பளிச் சட்டை. அதனைப் போர்த்திக் கொண்ட யாவரும் கம்பளிச்சட்டை நாயனாரே. இதனை ஆண்டவர்கள், **துறவறமில் லறமிருந்து பாய்ந்தவர்கள் பாதத்துகளெனது மேற்போர்வை படிய வைத்த அடியேன்** என அருளியுள்ளார்கள். ஆசானின் பாதத்துகளாகிய நாதத் தொனி நம் மீது போர்வையாக படிந்து பரமபத வீடடையச் செய்கிறது என்ற மெய்ச்செயலின் இரகசியங்கள் பொதியப்பெற்ற திருநாமமே கைலாய கம்பளிச்சட்டை நாயனார்.

**குருபெருமான் அருளமுதம்: தெய்வத் தேடு கூடகம் :**
**வானெலாம் சிறப்போ னாகி வருகுவே னெனவாக் கீந்து...** இறைவனின் அருட்கடாட்சத்தால், ஜீவதேக நாளையில் ஆன்மப் பொருளாக இருந்த நாம் அமானிதமெனும் சீதனக் கடன் பெற்ற நரனாக வந்துள்ளோம். கடனை மறந்து உலக மாயையில் சிக்கிக் கொண்டிருக்கும் நம்மை மீட்க வருபவர்களே மெய்க் குருபிரான். மானிடச் சட்டை எடுத்தும் மயில், குயில், புறா, கிளி, சேவல், செம்பூத்தன்னங்கா என பறவையை ஒத்த குணங் கொண்டோரிடம், ஓங்நார கோணத்துள் உற்ற மணாளரை கண்டீர்களா எனக் பிரம்மகூடகர்கள் கேட்டுக் கொண்டே வரும் வழியில் பொய்வேட இருடியர்களையும், அவர்கள் வேத நூல்களின் பாடல்களை மனனம் செய்து கொண்டு, பக்தி என்ற பெயரில் இறைவனை தேடுகின்ற உய்யாத மாந்தரை வதைத்து தீங்கினிற் தள்ளுவதையும் காண்கிறார்கள். இன்றளவும் இது போல் இவ்வுலகிலுள்ள போலிகளிடம் நாம் வெகு ஜாக்கிரதையாக இருந்து மெய்யை நோக்கி பயணிக்க வேண்டும் என குருபிரான் அருளிச் செய்து அவையை நிறைவு செய்தார்கள்.

### 21-05-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை
### தொகுப்பு: ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி

*ஜீவசகோதரர் கௌதம்:* மக்களுக்கு அழியாத மெய்யை அறிவிப்பதற்கே அவதார புருஷர்கள் இப்பூமியில் ஓவாது வந்து பிறந்து கொண்டே இருக்கிறார்கள். அபூர்வமான அப்பெரியோர்களை தேடி அடைவதே மனிதனின் தலையாய கடமை. **சும்மா இருக்க சுகம்** என்பது ஒரு மெய்க் குருபிரானின் இரக்கத்தால் நம் மனம் இருக்கும் இடம் அறிந்து அதை அலைவற்று உலகப் பொருட்களின் பற்றற்று சும்மா இருக்கச் செய்வதாகும்.

நம் ஜீவனை **காத்து ரட்சிக்கும் தீ** கைகொண்ட கார்த்திகை பெருமானாக வருபவர்களே மெய்க் குருபிரான். அலைந்து கொண்டே இருக்கும் வினை முதல்வனாகிய நம் மனதை பெரியோர்கள் அறிவாக மாற்றி பிரம்ம நிலையை அடையச் செய்கிறார்கள். அலைவற்ற மனதை அறிவின் சொரூபமாக மாற்றும் ஆசானின் செயலே பிரம்ம வித்தை. **அறிவு வடிவு என்றறியாத என்னை..... அறிவு வடிவு என்றறிந்து இருந்தேனே** என திருமூலர் பிரானும் அருளியுள்ளார். வெற்றி தருகின்ற பூப்போன்ற தீயான விபூதியை பெரியோர்கள் தங்கள் திருக்கரம் கொண்டு தருப்பித்து தருகிறார்கள். பஞ்சாட்சரமாகிய அவ்விபூதியே மனுவை ஈசனாக்கும் கோடிசூர்யப் பிரகாசச் சுடரொளியாக விளங்குகிறது.

*ஜீவசகோதரர் ஸ்ரீதுல்தாஸ்:* பிறப்பும் இறப்பும் முதலும் முடிவுமற்ற ஆத்மா எக்காலத்திலும் உள்ள நித்தியமான ஒன்றாகும். தோன்றுவது, நிற்பது, வளர்வது, மாறுவது, தேய்வது, அழிவது என்ற ஆறு வேறுபாடுகள் அற்றதுவே ஆத்மா. எமபயத்தை கடத்தி பிறவிப் பிணி தீர்க்கும் குருபிரானின் அன்புக்கு வையகமும் வானகமும் ஈடாகாது. குருபிரான் அவர்களே வேத சாட்சிகளுடன் நம் அறியாமையை அகற்றி அறிவின் தீபத்தை ஏற்றுகிறார்கள் எனும் பகிர்தலுடனும் தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவுற்றது.


Copyright © AMNA Trust, Chennai

**21-05-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. பானுமதி குமரேசன்**

**குருபிரான் அருளமுதம்:**

**பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் ... நீ எனக்கு சங்கத் தமிழ் மூன்றும் தா.** தமிழே பஞ்சாட்சரமாக உயிராக உள்ளது என்கிறார் வள்ளலார். நம் உள்ளத்தின் அறியாமையை அகற்றும் சாலைத் தமிழ் சர்வ வேதங்களின் உயிராணியாக எழுதாத எழுத்தாக நின்று விளங்குகிறது. ஒவ்வொரு மனிதனுள்ளும் அறிவாக நின்று விளங்கும் தமிழுக்குரிய தமிழ்க்கடவுளே முருகப்பெருமான். உயிராக, மெய்யாக, உயிர்மெய்யாக விளங்குவதே சங்கத்தமிழ்.

*ஜீவசகோதரர் பழனிவேல்:* **தமிழ்** என்பது மொழி கடந்த அறிவின் சுவையே. உயிராகிய தமிழை அறிய அருகதை உடையவர்கள் மனிதர்களே. மனிதத் தலையை கட்டிய தலையான தலையை அறிந்த ஓர் ஆண் குருவின் இரக்கத்தால் நாமும் அத்தலையை அறியலாம். மும்மூலமாகிய மூவினைகளை வென்றதாலே முருகப் பெருமானுக்கு அப்பெயர் உண்டாயிற்று. ஜீவனை அறிந்த ஜீவப் பண்டிதராகிய அவரே ஆறுமுகத்தை அறிந்த பிரணவ சொரூபி. உலகிற்கு ஞானத் தமிழை அருளிய ஞான பண்டிதனும் அவரே.

*ஜீவசகோதரி பத்மாபதி:*

**பூமியின் பாரந் தீர்க்க ...**
**சாமியும் வந்தா ரென்று சாற்றுவே னுங்ங்ள்க் கம்மே** **(தெய்வத் தேடு கூடகம்)**

பூமியான நமது பவப்பாரத்தை தீர்க்கவே யுகம்தோறும் குருவின் அவதாரம் நிகழ்கிறது. ஓரறிவு முதல் ஐயறிவு வரை உள்ள ஜீவ பேதங்கள் யாவும் தனது கடமையை விட்டு விலகாததுபோல் அரிய பிறப்பான மனிதனும் தன்னுள் இருக்கும் ஜீவனை ஒர் மெய்ஞானியின் மூலம் அறிந்து பிறவாமை பெறுவதே அவனது தலையாய கடமையாகும். பிறவாமை பெறும் பிரம்மவித்தை செயலை ஓர் மெய்ஆசானின் இரக்கத்தால் தான் அறிய முடியும். இறைவனிடம் மனிதன் வாங்கி வந்த அமானித கடனை ஓர் மெய்ஆசானிடம் சரணடைந்து முப்பொருள் தத்தம் செய்தே தீர்க்க முடியும். ஆடும் ஊசியில் நூல் நுழையாதது போல், தன்னறிவில் சாய்ந்து உலக இச்சையில் உழலும் ஒருவனின் உள்ளத்தில் மெய்யை புகுத்த இயலாது.

*ஜீவசகோதரர் தாமோதரன்:* ஜீவனை உயிர்ப்பிக்கும் ஞானமாகிய தமிழ் அவரவரிடத்தும் கழுத்துக்கு மேல் விளங்குவதன்றி கழுத்துக்கு கீழ் இல்லை. மனிதனின் பிண்ட உற்பத்திக்கு காரணமான தலையில் இருந்து வெளிப்படும் இறைவனின் சாயலே மனிதனின் அடையாளமாக உள்ளது.

*ஜீவசகோதரர் கோபிநாத்:* புறத்திலுள்ள ஐவகை னிலங்களும் மனித மனதின் அகமிய இரகசியமாக உள்ளது.
**குறிஞ்சி:** மலைகளும், மலை சார்ந்த இடமான குற்றமற்ற குறிஞ்சி னன்னிலம் கைலாயமாகிய இமயமலையின் இருப்பிடமாக, நீல மலையெனும் நிஜ தேவத் தெய்வமாக, எக்காலத்தும் எவ்விடத்தும் நம் முன் நிற்கும் மலை ஒலியின் இருப்பிடமாக உள்ளது.

**முல்லை:** காடுகளும், காடு சார்ந்த இடமான முல்லை நிலமே நம் அறியாமையை அகற்றும் காட்டானை உள்ள இடமாக விளங்குகிறது.

**மருதம்:** வயல்களும், வயல் சார்ந்த இடமான மருத நிலம், சொல்லேர் உழவராக வரும் குரு பெருமான், பண்படாத நிலமாகிய நம் மனதை பண்படுத்தி ஜீவப்பயிரை விளைவேறச் செய்யும் இடமாக உள்ளது.

*அஞ்ஞானமென்னும் பாம்பினால் விழுங்கப் பட்டவர்கள் ஜீவர்கள். அவர்களுக்குச் சிகிச்சை செய்பவரே வித்தியா சொரூபராகிய பகவானாவார். (ஆதலால்) அத்தன்மைய ஸ்ரீ குருவிற்கு னமஸ்காரம்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai

**நெய்தல்:** ஞானக்கடலாக விளங்கும் குருபெருமான் இருக்கும் இடம், நம்மை பிறவிக் கடலிலிருந்து கரை சேர்க்கும் கலங்கரை விளக்காக, கடலும் கடல் சார்ந்த இடமாக நெய்தல் நிலமானது உள்ளது.

**பாலை:** மணலும், மணல் சார்ந்த இடமான பாலை நிலம், அங்க தேசத்திற்கு மேற்கே அகண்டதொரு பாலைவனமாகவும், மகராசி கடுங்காவல் இருக்கும் மங்களமான இடமாகவும் உள்ளது.

*ஜீவசகோதரி செல்லம்மா:* **உருமுர சறைந்து காட்டி.... சீவ முத்தரின் னோக்க மென்னே (காமீல்கள் னோக்கம்)** பாவ புண்ணியம் இன்னது இன்னதென்றும், தன்னுள் இறைவன் இருக்கும் இடத்தை அறிவதே தன்னை அறிதல் என்றும், வீணாகும் உயிர் வீணாகாமல் இருப்பதற்கு, ஐந்து எழுத்து மந்திரத்தின் இருப்பிடத்தை ஆசான் அருளால் அறிந்து கொண்டேன். இப்படியான அகமிய ரகசியங்களை அறிய வைக்கும் அவையாக இன்று ஆதி மார்க்க னீதி அவை விளங்குகிறது என்ற பகிர்தலைத் தொடர்ந்து தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

## 25-05-2023 ~ வியாழக்கிழமை சபை
## தொகுப்பு: ஸ்ரீமதி. புன்னகை மகேஷ்குமார்

**எங்கும் மெய்வழி ஏறித் துலங்கிட....** எனும் வைகாசி பௌர்ணமி திருவிழா பாடலுடன் அவை உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:** செயலுடைய சமரசம் என்பது அழிதேகம் கடந்த ஜீவனின் ரகசியமாக உள்ளது. இதை உணர்ந்த மக்களாக ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள் உள்ளனர். செத்தவனையும் உயிர்ப்பிக்கும் ஆசானின் னாதமாகிய வான வேதாந்த சஞ்சீவியே, செயலுடைய சமரசமாக திகழ்கிறது. பிரம்ம பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய வேத வேதாந்தங்கள் ஜீவனுக்கான ரகசியமாக மக்கள் யாவரும் பயன் பெறவே அருளப் பெற்றுள்ளது.
**வான்மதிக் கொரல் வாக்கியம் எண் 114:** ஊண் உறக்கமற்ற தோற்றமில்லா அனாதியெனும் இறை திருவுரு மனித சட்டையுடன் ஆதியாக உருவெடுத்து எமனை தன் கையகத்தடக்கி உத்தியோவனக் கானகத்தில் வந்துள்ளது. அத் திருவுருவின் வேதனாவாகிய அருள்னாவெனும் ஆதியின் திருமலி னீதியின் னாவிலிருந்து வெளியாகும் அருட்சீர், வீண் மனுவை ஈசனாக்குகிறது.

**குருபிரான் அருளமுதம்:** நாம் பேரின்பம் அனுபவிப்பதற்காக ஊண் உறக்கம் இல்லாது எலும்பு இளக, குடல் கருக சாலை ஆண்டவர்கள் புரிந்த கடுந்தவமே இன்று நம் அறியாமை திரை அகற்றி அறிவு திருமேனியான **ஆதி தன் ஜோதி** எனும் வெளிச்ச பொருளை, ஓதக்கூடிய அறிவு பெற்ற மக்களாக இந்த சத்சங்கத்தில் நம்மை ஆக்கியுள்ளது.

*ஜீவசகோதரர் வெங்கடேச முத்து:* **திருக்கொரல் - நீத்தார் பெருமையின் சாரம்சம்** வாழும் போதே உலகப் பொருள்களின் மீதுள்ள இச்சை தீர்ந்து, பற்றற்று, ஒழுக்கம், துறவு, உலகு, பற்று, புலனடக்கம், பொறியடக்கம், குணம், அந்தணன் என்பதின் அகமிய ரகசியங்களை அறிந்து இறைவனுடன் இரண்டறக் கலந்து வாழும் ரகசியத்தை கூறுவதே நீத்தார் பெருமை. இப்படியான பெருவாழ்விற்குரிய மேன்மையான வழியாக இன்று ஆதி மார்க்க னீதி அவை உள்ளது.

*ஜீவசகோதரர் சிரஞ்ஜீவி:* **திருஅருட்பா** ~ **ஒன்றென இரண்டென ஒன்று இரண்டென இவை அன்றென விளங்கிய அருட்பெருஞ் ஜோதி.** ஒன்றானவன் உருவில் இரண்டானவன் என ஔவையாரும், **ஆறைந்தும் ஒருவ ருக்காய் அருளிய அதனைத் தானே... கூர்ந்நஒன் றினிலே இன்னும் கோடியாய்ப் பிரித்தாய் போற்றி** என சாலை ஆண்டவர்களும் அருளியுள்ளார்கள். ஏகாட்சரப் பொருளாகிய ஜீவனின் ரகசியத்தை அறிந்தால் கோடியெனும் அமானிதத்தை அறியலாம். நான் எனவும் உடம்பு எனவும் இரண்டாக இருப்பது, அறிவாகிய



Copyright © AMNA Trust, Chennai

பரமாத்மாவுடன் ஒன்றுவதையே **யானும் னீயும் ஒன்றென்று உரைத்து நல்கும் ஜோதியே** என வள்ளலாரும், **ஒன்றான ஐம்மணியாம் பொதிகை பூட்டி** என சாலை ஆண்டவர்களும் அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரர் தியாகராஜன்:* **அழகு அணி சித்தர் பாடல் எண்:16 காமமலர் தூவக் கருத்தெனக்கு வந்ததடி...** சிவ காமமாகிய ஆசானின் அன்பே நம்மை சிவமாக்கும். ஆசான் அருளால் ஜீவனாகிய சிவலிங்கத்தை அறிந்து வாழும் நித்திய வாழ்விற்கெனவே இறைவன் மனிதனுக்கு ஆசையை படைத்தான். பாமம் என்னும் கோபத்தினால் கண்ணிருந்தும் குருடராய், காது இருந்தும் செவிடனாய், வாய் இருந்தும் ஊமையாய் நாம் இருப்பதை வேதங்கள் கூறுகின்றன. ஆசான் இரக்கத்தால் நம் கோபம் தவிர்த்து, அறிவுக்கண் அறிந்து முச்சுடர் தோன்ற மூவாசை விட்டு வாழலாம்.

**குருபிரான் அருளமுதம்: தெய்வத் தேடுகூடகம்:**
அகமியத்தின் ரகசியத்தை உணர்த்துவதே ஆண்டவர்களின் திருப்பாடல்கள். தேடு கூடகர்கள் முதலில் சந்திக்கும் போலி சாமியார்கள் யாரெனில், இல்லாததை இருப்பதாக நம்பும் நாம் தான். **சாவை மீறுபவர்களே சாமி. பிறப்பு இறப்பு இவற்றிலிருந்து நம்மை மீட்கும் கந்தமாகிய சுவாசத்தின் ரகசியமே கந்தசாமி**. மனம், நான், நினைவு, ஆன்மா யாவும் பிரம்மம். இந்த மெய்ஞான அறிவை உணராமல் கூறும் யாவும் நீர் மேல் எழுத்தே. மெய்அனுபவம் மூலம் மெய்யறிவை அறிந்து மெய்உணர்வு பெற்ற பின்பே இதனை எடுத்துப் பேச முடியும். மனுமகனைத் தேடும் தேடுகூடகர்களிடம் அவரைக் கண்டார் இல்லை என பறவைகளின் குணங்கொண்ட மானிடர்கள் கூறினர். நிஜமான தேடுதல் உள்ளவர்களுக்கு தெரிவிக்க ஒருவர் கட்டாயம் வருவார் என்பது போல் உலகம் இன்னதென உணர்ந்த மலைக் குரமாது அவர்கள் முன் தோன்றினார். அவரின் வார்த்தை தன்னரங்கம் தேடி வரும் தேடு பாடுடையவரை பொன்னரங்கத்தில் சேர்த்து விடும் தன்மை கொண்டதாம். இமைய மகா மேருகிரியின் பனிச்சிகர சலாசனபீட முகடுறை மகுட மேடராகிய ஆரூரான் தனது அம்மான் எனவும் அவர் பாற்கடல் மூலமாக பார்க்கக் கூடியவராக இருப்பதாகவும் கூறும் குரமாதைச் சந்திக்கும் முன் தேடு கூடகர்களாக இருந்தவர்கள் சந்தித்தபின் பிரம்ம கூடகராகும் ரகசியத்தை ஒரு மெய்க்குரு பெருமானின் இரக்கத்தால் அறிந்து கொள்ளலாம் என அருளி தோத்திரப் பாடலுடன் குருபிரான் அவையை நிறைவு செய்தார்கள்.

## 27-05-2023 ~ சனிக்கிழமை சபை
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

**வானவே தாந்நச் சஞ்ஞீவி...** என்ற ஆனந்நக் களிப்பு பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
வானமுதமெனும் வாசுகியின் சஞ்ஞீவி கொண்டு வரும் குருபிரான், நம் அறியாமை அகற்றி ஆனந்தத்தில் திளைக்கச் செய்கிறார்கள்.

**எமபடரடிபடு கோடாயிதக் கூர் - வாக்கியம் எண் 129:** பிறர்க்கும் தனக்கும் தீமை செய்ய முயற்சி தேவையில்லை, ஆனால் நன்மை செய்ய வைராக்கியம் திடம் தைரியம் வேண்டும். தீமை தரும் குறைமனத்துப் பிழை ஒதுக்கிப் பழகித் தேர்ந்த குருகுலாதிபரின் தயவால் ஜீவனின் ரகசியம் அறிய வைராக்கியம் திடம் தைரியம் வேண்டும்.

*ஜீவசகோதரி லாவண்யா:* ஒரு தலைமுறை காலம் நம்மைக் காத்துவரும் மெய்யறிவு னற்றாளை மெய் வணக்கத்தால் கண்டு மெய்யுணர்வு பெற்று, மெய்வழி எனும் மேடு கண்ட புண்ணியராக வாழும் காலமே நமக்கு வசந்த காலம்.

**குருபிரான் அருளமுதம்:** நந்தியெனும் குருவின் ஞான அகவலெனும் அழைப்புக்கு செவி கொடுத்து காதாகிய அறிவைப் பெற்று, அவரவரின் நாமமாக இருக்கும் மெய்ப்பொருள் னிரூபிக்கப் பெறும் போது மெய் மெய்யாகிறது.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **சத்தியவேதம்**
**யோவான். அதிகாரம் - 6** *ஜீவ அப்பம் நானே. உலகின் ஜீவனுக்காக வானிலிருந்து இறங்கிய நான் கொடுக்கும் அப்பமாகிய என் மாம்சத்தையும் இரத்தத்தையும் புசிப்பவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. நான் உங்களுக்குச் சொல்கிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது.* கர்த்தராகிய குருவினிடமிருந்து வெளியாகும் தேவவசனமாகிய பரிசுத்த ஆவியே, ஜீவனுக்கான அப்பமாகவும், மாம்சமாகவும், இரத்தமாகவும் உள்ளது. அதனை செவி வாயிலாகப் புசிப்பவர்கள் நித்திய ஜீவனை அடைகின்றனர்.

**குருபிரான் அருளமுதம்:** மாம்சம் எனும் மா அம்சம், நன்னெறியான சென்னெறியில் வழி நடத்தும் வற்றாத ஜீவ ஊற்றாக, நன்னீராக ஆசானின் நன்னாதமாக உள்ளது.

*ஜீவசகோதரர் கோபி:* **பகவத் கீதை - சன்னியாச யோகம்:** கர்மத்திற்கு காரணமான மும்மலம் நீக்கி, புலன்வழி செல்லாது, பற்றற்ற சிவமயப் பொருளைப் பற்றியவன் சன்னியாசி. பரமாத்ம சொரூபராகிய குருவே ஆணாகவும், சீடர்களே கோபியர்களான பெண்ணாகவும் உள்ளனர். தர்மனின் தன்னறிவுத் தீவினையே குருஷேத்திர யுத்தத்தின் காரணம். வினை தீர்க்க ஒன்பதுவாசல் ஒரு மந்திரத்தால் அடைத்து புற நினைவு விட்டு, விழி மூடி இரு புருவத்திடை பார்த்து, சுழிமுனையில் மனம் நிறுத்தி, புலனடக்கி குணமற்று இருப்பவன் முக்தன் என்கிறது பகவத்கீதை. முக்கோண சக்கரத்துள் குருசொன்ன ஆசனமிட்டு தூல உணர்வற்று சைவத் திருமேனியில் குடியேறி வாழப்பழகுவதே சன்னியாசம் என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

**குருபிரான் அருளமுதம்:** பெரியோர்களின் பேரிரக்கத்தால் அழி தூல ஆசை விட்டு அகமியத்தில் ஜீவான்மாவுடன் இரண்டறக் கலந்து வாழும் நிலையே சன்னியாசம்.

*ஜீவசகோதரி ஜீவிதா:* **கைலாய கம்பளிச்சட்டை நாயனார்**
**முன் ஞானம் - காப்பு** - **அகண்ட பரிபூரணமாம் உமையாள் பாதம்...** கோடான கோடி மறை புகழும் பாதத்தை உமையாள், ஐயர், கணேசன், வாணி, குரு, சொரூபம், சின்மயம் என ஏழு நிலைகளாக அருள்கிறார்கள். எதார்த்த பரமாத்மாவை அறிய வைக்கும் ஆசானின் பூம்பாதமே சர்வத்திற்கும் முதல் பாதம். அதுவே நம்மை தன்னை அறியும் தவமுறையில் நிலைக்கச் செய்து மூவுலகிலும் ஊடுருவி நிற்கும் சின்மயப் பொருளை தரிசித்து வலம் வரச்செய்து மேனிலையில் ஏற்றி வைக்கிறது.

**குருபிரான் அருளமுதம்:** அவரவரின் புராதனச் சொத்தான அமானிதத்தை அறிய மதி அதிகம் வேண்டும். இதை அறியாதவர்களே கல்லாதவர்கள் என்கிறது வேதம்.

**தெய்வத் தேடுகூடகம்:** தெய்வக் குரமாது குறியுரைக்கும் பச்சமலை, பவளமலை, கொச்சிமலை, குடகுமலை என்பன காற்று, நெருப்பு, நீர் எனும் தத்துவமாக ஆத்ம மர்ம ஜலக்கடல் மீது பிரிதொன்றின் துணையின்றி, சிவனெனும் வாடாத தீபமாக, வேர் மேலும் தலைகீழுமாக உள்ளது. குமரி கன்னியிடம் இருக்கும் இருளை மரிக்கச் செய்யும் கற்பத்தை பெரியோர்கள் தங்கள் திருக்கரத்தில் ஏந்தி வருகிறார்கள். பத்து வயது கன்னித்தாய் வாசம் செய்யும் னாடே பார்பதி குடியிருக்கும் இடம். குருகாணிக்கை வைத்து, உதய திசையெனும் குடதிசையாம் குருதிசை நோக்கி, உள்ளமாகிய கை நீட்டி ஞானமாலியான கூற்றினை உதைத்த பாதத்தை தேவதியானம் செய்து, **ஆமனு** என பிரம்ம கூடகர் குரமாதிடம் உரைக்கும் நாமமே வேதத்தின் திறவுகோல். ஆமனு ஈசன் வந்து தேவர்களுக்கு அருளமுதம் தந்தது சம்பவ அதி தீர்க்க தரிசனையாகும்.

பிறப்பு இறப்பற்ற பேரின்ப நிலை பெறவே தேவர்கள் திருப்பாற்கடலில் அமுதம் தேடினர். அவ்வமுதமானது புராதனான குருபரனின் மூலம் தேவ ரகசியத்தை சுமந்து கொண்டு ஒவ்வொரு காலத்திலும் மக்களுக்காக தனுவினுடைய **னா**ணியின் னின்று கும்மென வீறிட்டெழுந்து வருகிறது. மெய்ஞானத்தை உணர்ந்து பலன் பெறவே ஆதி மார்க்க னீதி அவை மூலமாக, மக்களுக்கு **மார்க்க ஞான சைதன்ய னெறி** எனும் னூல் வழங்கப் பெற்றுள்ளது. ஏட்டினில் இருந்து பேசும் செயலுடைய திருவசனங்களை கூட்டினில் நிஜமதாக்கி ஆசான் அருளிய மூலமந்திரச்சாவி கொண்டு திறந்து, தேவாமிர்தம் பருகி தேவப்பதவி அடையவே ஆதி மார்க்க னீதி அவையில் நாம் கூடியுள்ளோம் என அருளி தோத்திரப் பாடலுடன் குருபிரான் அவையை நிறைவு செய்தார்கள்.



Copyright © AMNA Trust, Chennai 

**28-05-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. மணிமொழி மஞ்சுநாதன்**

*ஜீவசகோதரர் கௌதம்:* **தன்னை அறிவதே இன்னில வாழ்வு** என்பதனை அடிப்படையாக கொண்டதுவே ஆதி மார்க்க னீதி அவை. ஒரு மெய்க்குரு பிரானின் கருணையால் ஆறாவது அறிவின் பயன் பலன் இன்னதென அறிந்தவனே மனிதன். கால்வழியில் பிறந்த னரனை மனுவாக்கி பின் தேவனாக்கும் செயல் ஆசானின் திருமுன்பாக ஏழாவது பிறப்புடல் எடுக்கும் போதே நிஜமாகிறது. சொர்க்கம் என்பது மனுவிற்கே அன்றி னரனுக்கு அல்ல. னர ஜென்மம் எடுத்த யாவரும் வானவர் ஆவதற்கே வயது வாழ்னாள் இறைவனால் தரப்பெற்றுள்ளது. வந்த வேதமாகிய ஒரு ஜீவபதி அரசரின் முன்னிலையில் தான் மனு தன் ஜீவனை அறிந்து ஜீவாத்மா ஆக முடியும்.

வேதம் ஆசான் திருமேனி. வேதத்தின் தலை முப்பொருள் கோல விளக்கமாக உள்ளது. பஞ்சபூத கலப்புடன் ஐம்புல நுகர்வால் மனமாக நம்மிடம் இருந்த ஒன்று அகம் புறம்பும் கண்டாண்ட ஆசான் முன்னிலையில் செல்லும் போது அறிவெனும் பஞ்சாட்சரப் பொருளாக மாறி செம்மையாகிறது. மந்திரம் என்பது இறைவன் வாழும் இல்லமாக நம் சொந்த வீடாக உள்ளது. நினைவிருக்கும் தலமாகிய அதில் குடியேறி வாழப் பழகியவர்களுக்கே மூச்சுலயமாகிய மனோலயம் கை வரவாகும். அவ்விடமே கைலாயம் மெஹ்ராஜ் வைகுண்டம் சத்திய லோகம் என்பதாகும். அவரவரின் நாமமாக விளங்கும் அழியாத ஆன்மாவே பிள்ளையார் சுழியாக, ஐந்து எழுத்து மந்திரமாக, அறுசுவை கொண்டு ஒளிக்கும் இடமாக உள்ளது. கோடியொளி காந்தி வீசும் இதனை அறிந்தவர்களே ஜென்ம சாபல்யத்துக்கு உரியவர்கள். மனத்துக் கண் மாசிலான் ஆகும் செயலே **அகம் ப்ரம்மாஸ்மி**. வித்தில்லா வித்தாகிய ஆசானின் நாதம் மூலமே நமது இதயலோகத்தில் விளங்கும் சுயம்பிரகாச பொருளை தரிசிக்க முடியும்.

*ஜீவசகோதரர் சசிகுமார்:* தெளிவு என்பது குருவின் திருமேனி காண்பதும், திருவார்த்தை கேட்பதும், செப்புவதும் திருவுருவை சிந்திப்பதும் ஆகும். நீதி எனும் பொருளாக வரும் ஆசாசனின் அறிவான வார்த்தைகளே நம் அறியாமையை விலக்கி, அறிவுடன் நம் சூக்ம தேகத்தில் குடியேறி வாழ்வதற்கான வழியை அருள்கிறது. அறியாமை இருளை விலக்கி அருளாக்கும் செயல் இன்று ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களுக்கு வாய்த்துள்ள வரப்பிரசாதமாகும்.

*ஜீவசகோதரர் சங்கர்:* மனம் பூத்த திருமேனியாக மதி பூத்து ஒளிர்னாவுடன் வரும் வள்ளலே, நம் சினம் தணிக்கும் அறச்செயலில் நம்மைப் பழக்குகிறார்கள். பிரம்மவித்தை செயல் கைக்கொண்டு சர்வ காலமும் பிரம்மலயத்தில் வாழும் பெரியோர்களின் திருவடி நிழலை தஞ்ஞமெனப் புகுந்தவர்களே பிறவாமை பெறுவர் என்ற பகிர்வுடனும் தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.

**28-05-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. அருணா சுதர்சன்**

**ஓங்காரத் தொனியான கபாலத் தேசிறு வழியறியார்...** என்ற ஞான முறையீடு பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரி கலைச்செல்வி:* பெரியோர்கள் அருளும் செவிச்செல்வத்தால் நம் பாவ நினைவுகள் பரிசுத்தமாகின்றன. மெய் வணக்கத்தின் மூலம் மாயையில் மனம் மயங்காமல் நான் எனும் அகங்காரம் அழிந்து சுத்த நினைவுடன் வாழ வழி நடத்தும் மெய் குருபிரானின் அருள் கட்டாயம் மனிதனுக்கு வேண்டும்.

*ஜீவசகோதரர் தாமோதரன்:* மனிதனுக்கு மேன்மையை உணர்த்தவே மதங்கள் யாவும் வந்தன. மனிதனின் உயிரொட்டிய ரகசியமாகிய சமத்துவத்தையும் சமாதானத்தையும் தன்னில் அறிந்து, மூக்குக்கு வெளியே மூச்சு ஓடா வல்லபமுடன் வருபவர்களே மெய் குருபிரான். அவர்கள் சொன்ன ஆசனத்தில் அமர்வதே, வரும் நாட்களை நல நாளாக மாற்றுகிறது.



Copyright © AMNA Trust, Chennai 

அகந்தைக் கிழங்கறுத்து, அறியாமையகற்றி, அறிவுத் தெளிவைத் தரும் குரு பெருமானின் தெவிட்டாத தெள்ளமுதைப் பருகுவதே, ஜென்மசாபல்யம் பெறுவதற்கான வழி. பஞ்சாட்சரமான சாலை தமிழ் படிப்பதன்றி, ஆசான் அருளால் பழகுவதாக உள்ளது.

**குருபெருமான் அருளமுதம்:**
ஐந்தெழுத்து மந்திரமாகிய தமிழே பஞ்சாட்சரம் என வள்ளலார் அருளியுள்ளார். ஆன முகமான ஆசானே அணையா விளக்காய் வந்து விந்ததனில் னாதம் நின்று விளங்கும் நிலையை அறிவிக்கின்றார்கள்.

**இலஞ்ஞுழி சுழித்து ஏகமாய் விம்மி**
**எழுந்நன எழுத்திலா தெழுத்தின்**
**பெலமுட னெழுந்நு துளிர்கொண்டங் ஙோடிப்**
**புரண்டது தூண்டியின் வடிவாய்க்**
**கலம்நொண்டு எழுதா எழுத்தது மீமாய்க்**
**காணுமற் றலையுடன் காலாய்**
**இலகிய தலைபார்த் தூதிடத் தொனித்தங்**
**ஙெழுந்நிடும் வலம்புரிச் சங்ஙே** **(ஞானச் சங்ஙு)**

எமபடரச்சமென்னும் இருட்பிடிப்பை எவருடைய நெஞ்ஞகத்திருந்தும் பிடுங்கி எறியவல்ல மெய்வழி சாலையின் ஏற்றமிகு கல்வியே தமிழாகும். எல்லா வேதமாமறைகளின் வட்டப்பூட்டையும் எட்டித் திறக்க வல்ல திறவுகோல் சாலை தமிழ் ஒன்றே தான்.

*ஜீவசகோதரர் சங்கர்:* தமிழ் என்பது னீதியாக, வாய்மையாக, ஜீவனாக, சக்தி வடிவாக னாத வடிவாக உள்ளது. 12, 18, 216 எழுத்துக்கள் கொண்ட சங்கத் தமிழாகிய முத்தமிழின் ரகசியத்தை அறிய ஓர் மெய்க் குருபிரானின் அருள் வேண்டும். மனதின் செயலாகிய தோற்றங்கள் யாவும் அறிவு நிலையில் அகலும் போதே விந்து நாதத்தின் ரகசியத்தை அறிய முடியும். சாலை ஆண்டவர்கள் அருளிய தமிழின் விடுபட்ட 18 எழுத்துக்களின் உபதேச ரகசியத்தை பெரியோர்களின் பேரிரக்கத்தால்தான் அறிய முடியும். அகமியத்தில் அறிவுக்கண் திறந்து, அழிந்திடா சூக்குமத்துள் அடங்கி, அழியாமையில் ஆக்கி வைக்கும் செயல் கொண்டதுவே ஆதி மார்க்க னீதி அவை. தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவுற்றது.



Copyright © AMNA Trust, Chennai 

**இசை வகுப்புகள்**
**தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்**

**07-05-2023 ~ ஞாயிற்றுக்கிழமை**

**பள்ளியையும் மெய்ப்பால் தந்த வள்ளலை...** என்ற குரு ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**வஞ்ஞுஞ்ஞுஞ் ஞலனெஞ் ஞுணுகா**
**வருங்ஙுரு னாதரின் னெருங்கிரு பாகர**
**வந்நின்பந்தந் நேத டம்பட**
**வாசி யுன்வசம் பேச வும்னிச-மிதுதீர்க்கம்**

**வஞ்ஞுமில்புலி யுடைதரித் தேவன**
**வாச மேவரும் தேசி கர்பெரு**
**மாசில்இளனிலாப் பூர ணவண்ணம்**
**மார்க்க னாதரின் வாக்கிது முற்றா-மீனாமீன்**

பூரண வண்ணப்பா பாடல்கள் ராக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை இனிதே நிறைவுற்றது.

**28-05-2023 ~ ஞாயிற்றுக்கிழமை**

**முன்னுரு தங்ஙுர சிக்குல மாமணி... என்ற தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.**

**ஆதி னாயகம் அரசர் னாயக**
**மான என்குரு னாயகம்**
**ஆதி யந்நமும் தான்க டந்நெனை**
**ஆண்ட என்குல னாயகம்**
**மாது னாயகம் மனிதர்னா யகம்**
**மனுக்கு லனன் னாயகம்**
**வான னாடர சாண்ட தனிகை**
**வள்ளல் மாதவ னாயகம்**
**சோதி னாயகச் செம்ம லின்பதம்**
**சூழ்ந்நு வானவர் போற்றுமென்**
**ஜாதி னாயக மாமு கம்மது**
**சாலி கென்குரு னாதரின்**
**சீத ளஇரு பாத மென்சிரம்**
**சேர்த்து என்னுளம் பூத்ததில்**
**ஓதி டென்றுரை கேட்டிங் ஙோதிய**
**ஒலிக்கு மெய்ம்மண ஞானமே**

மெய்ம்மண ஞானம் காப்புப் பாடல் குருபிரானின் வழி காட்டலின் படி ராக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப்பெற்று அவை இனிதே நிறைவுற்றது.

**குரு வாழ்க ! குருவே துணை !!**


Copyright © AMNA Trust, Chennai

# 2023 – மே மாத அவை னிகழ்வுகள்

**01-05-2023 ~ தூத்துக்குடி~ சிறப்பு அவை**

தொழிலாளர் தின சிறப்பு அவை, **குருபிரான் சாலை ரவி அப்பா** அவர்களின் முன்னிலையில் இனிதே நடைபெற்றது.







*ஜகத்திற்கு ஹேதுவாகியும், ஸம்ஸார சமுத்திரத்துக்குச் சேதுவா (அணையா) கியும், சகல வித்தைகளுக்கும் பிறப்பிடமாயு முள்ள சம்புவான குருவிற்கு னமஸ்காரம்.*


***~ குரு கீதை***




Copyright © AMNA Trust, Chennai 

**12-05-2023 ~ சிவகாசி~ நூல் வெளியீடு**

ஆதி மார்க்க நீதி அவையின் அங்கத்தினர் ஜீவசகோதரி விஜயசித்ரா அவர்கள் எழுதிய **மார்க்க ஞான சைதன்ய நெறி** நூல் **12-05-2023** ஆம் தேதி சிவகாசியில் **குருபிரான் சாலை ரவி அப்பா** அவர்களின் திருக்கரங்களால் வெளியிடப்பெற்றது.






Copyright © AMNA Trust, Chennai

## 2023 மே மாதம், AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை அளித்தவர்கள்

இன்பலதா
கணேசன்
மணிவண்ணன்
சங்கர்
மாதவன்
ஸ்ரீமா
மகிமா
சபரீஷ்
சபிதா
வடிவேலன்
தனராஜன்
ஜெயப்பிரகாஷ்
உமாராணி
செல்லம்மா
புன்னகை
கம்பராஜன்
ராஜமகேஷ்
மணிமாறன்
தியாகராஜன்
கார்த்திகேயன். ஆவடி
மகேஷ். மதுரை
கார்த்திகேயன். சிவகாசி

AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்க ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

Account Name: **Aathi Margha Neethi Avai**
Account Number: **50200047470073**
IFSC: **HDFC0000323**
Branch: **Mylapore**



Copyright © AMNA Trust, Chennai

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri ,***
***Chennai – 600012***

***www.amnatrust.org***

**Contact Us**:

*Email: write2amnatrust@gmail.com*

*YouTube Channel: https://youtube.com/c/amnatrust/*

*Facebook Page: https://www.facebook.com/amnatrust/*

*Twitter Page: https://twitter.com/TrustAmna*

*Instagram: https://www.instagram.com/amnatrust*

***பின்குறிப்பு***: *இம்மின்னணுச்சஞ்சிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Vijaya Shankar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Issue 23 - Month: June 2023*